லும் வசிய திருஷ்டிப் பார்வையை நிருத்தி கூட்டிற்குள் புகுந்து மிருகத்தை தடவிக் கொடுத்து சர்க்கஸ்காரர்கள் விளையாட்டைக் காட்டுகிறார்கள். இதன் ரகஸ்யங்கள் யாவையும் நம் முன்னோராகிய மகரிஷிகள் அறிந்தே காடுகளிலும் மலைகளிலும் இருந்து துஷ்ட மிருகங்களை அடக்கி யாதொரு பயமுமின்றி தம் தொழிலை நடத்தி வந்தனர்.

அணிலை வசியஞ்செய்தல்

அணிலைப் பிடித்து அதன் தலையிலிருந்து வால் முனைவரையில் முதுகு வழியாக இலேசாய் இரண்டு நிமிஷங்கள் தடவி இரக்குதலாலும் பிறகு அதன் நெற்றி முதல் மூக்கு முனைவரையில் கீழ் நோக்கி தடவி இரக்குதலாலும் அது கண்களை மூடி தூங்கி விடும். பிறகு கை குட்டையை அதன் முகத்திற்குப் பின்சுழற்றி குளிர்ந்த காற்றை வீசி கை தட்டினால் அது எழுந்து விடும்.

ஞானரஞ்சினி பிரஸ்," சௌகார்பேட்டை, சென்னை.

உ

பதிவிரதா பூஷணம்

எனும்

ஓர் நீதிநூற் கதாவாசகம்.

இரண்டாம் பதிப்பு.

இயற்றினோர்
தி. ஆ. பெருமாள் பிள்ளை

பிரசுரகர்த்தர்:
எம். ஜி. ஆர். நாயுடு

ஸ்ரீ பார்கவி அண்டு கம்பெனி,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

சென்னை - சூளை
பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட் ரிஜிஸ்டர்] 1926. [விலை அணா 6.

K. V. A. MUDALIAR,
92, Kamatchi Amman Koil St.
CONJEEVARAM. (BIG)

இப்புத்தகமும் இன்னும் தங்களுக்கு வேண்டிய நாவல்களும், மற்ற எல்லாவித தமிழ் புத்தகங்களும் வேண்டியவர்கள் அடியிற் குறிப்பிட்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ பார்கவி அண்டு கம்பெனி,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

அபிப்பிராயங்கள்.

சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியரும்,
'செந்தமிழ்ச் செல்வி' பத்திராசிரியரும் ஆகிய

ஸ்ரீமான்

மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

திரு. தி. ஆ. பெருமாள் பிள்ளை என்பவர் எழுதியுள்ள "பதிவிரதாபூஷணம்" என்னும் புத்தகத்தைப் பார்வையிட்டேன். அது மிக இனிய தமிழ் நடையில் இயன்றுளது. கற்புடைமங்கையர் பலருடைய அருங்குண மாட்சிகளையும் ஆண்டாண்டு விரித்தும் தொகுத்தும் கூறுகின்றது. இடையிடையே அதன்கண் ஆசிரிய வசனங்கள் பல விரவியிருக்கின்றன. கதைப்போக்கிலே இந்நூலாசிரியர் பல அரிய உண்மைகளைக் கதாபாத்திரங்கள் வாயிலாகப் புகட்டுதலின் படிப்பவர் மனமகிழ்ச்சி யடைவதற்கு இயலும். இதனை யாவரும் வாங்கிப்படித்து இதன் ஆசிரியரை ஊக்குவார்களென நம்புகின்றேன்.

சென்னை, 10 - 8 - 23 **மணி - திருநாவுக்கரசு**

அபிப்பிராயங்கள்.

'மனமோகன மாணிக்கம்' 'முக்தமாலா' 'ஸ்ரீராமலீலா அமிர்தம்' முதலிய நூல்களுக்கு கர்த்தாவாகிய

ஸ்ரீமான்

தி. பக்தவச்சலம் பிள்ளை, B. A. அவர்கள்

திருவாளர் **T. A.** பெருமாள் பிள்ளை அவர்கள் எழுதியுள்ள "பதிவிரதாபூஷணம்" என்னும் அழகியதொரு சிறிய நூலைக் கண்ணுற்றேன். அதின்கண் அனேக நீதிகளையும், உண்மைகளையும் புகட்டியிருப்பது மிகவும்பாராட்டத்தக்கதாயிருக்கின்றது. நல்ல இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதானது எவர்க்கும் மகிழ்ச்சி விளக்காது போகாது. ஆங்காங்கு மிகப் பொருத்தமான மேற்கோள்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இதை மிகப் பெரிதும் முயன்று பதிப்பித்த நண்பர் எம். ஜி. ஆர். நாயுடு பெருந்தகைமையும் பாராட்டத்தக்கது. ஆசிரியர் பெருமாள் பிள்ளை அவர்கள் இன்னும் மேன்மேலும் தமது அரிய புத்தி நுட்பத்தால், அனேக நூல்கள் எழுதி வருவாரென நாம் நம்புகிறோம். பதிவிரதா பூஷணம் என்னும் அரிய இந்த நூலை ஒவ்வொருவரும் வாங்கி வாசித்தல் அவசியமென யான் கருதுகின்றேன். (நமது பிள்ளைகளும் பெண்களும் இதை வாசித்தல் மிக்க அவசியம்.)

வேப்பேரி, 13-8-23. **தி. பக்தவச்சலம்.**

நூன்முகம்.

"பதிவிரதா பூஷணம்" என்றுற் கற்பிற்சிறந்து விளங்கும் பெண்களுக்கு அணிகலம் ஆக விளங்கும் நூல் என்பது பொருளாம். இந்நூலானது கற்பிற்சிறந்து விளங்க விரும்பும் கன்னியர்க்கும், கணவனோடு கலந்து வாழும் மங்கையர்க்கும் வேண்டப்பெறுவது ஓர் நூலாகும். இன்னும், "பதிவிரதா பூஷணம்" எனும் இந்நூலானது நல்ல நாயகனை யடைதல் வேண்டும் என்ற திருவிரதங் கொண்டுள்ள மங்கையர்களுக்கு ஓர் அணிகலம் போல்வதாகும் என்ற பொருளுடையதாம். ஆகலின், இது பெரும்பாலும் மங்கையர்களுக்கே உரித்தான நூலாவதோடு,

"மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டேர்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று."

என்ற பெரியோர் அனுபவத்தைச் சீர்தூக்கு மளவில், நன்மங்கையரைத் தமது பாக்கியவசமாய்க் கிடைக்கப்பெற்றுள்ள நாயகன்மாரும் தமது பத்தினி நல்லாரை எத்தகைய பண்பினராயிருந்து நேசித்தல் உத்தமம் என்ற விதிகளையும் எடுத்தோதுவதா யிந்நூல் விளங்குவதால் இது ஆடவர்களுக்கும் உரித்தான நூலேயாகும்.

மாதவஞ்சான்ற பாரதமாதாவின் புத்திரர்களாயுள்ளார் தாமே இல்லற தருமத்திற் சிறந்தவராவார் என்று கூறுவர்

சான்றோர். நமது நாட்டு நீதிநூற்களே இன்றும் மலையிலக்கா யொளிர்கின்றன. அத்தகைய இல்லற தரும நீதிநூற்களின் சாரமாயமைந்த விஷயங்கள் பலவும், திருமணம் நடத்தும்போது நிகழும் சிறந்த ஐதீகங்களின் உட்கருத்துக்களும் இந்நூலின்கண் கதாரூபமாக எளிய செந்தமிழ் நடையில் விளக்கப்பட்டுள்ளன. ஆகலின், இந்நூலானது பள்ளிச்சிறார் முதல் எல்லோருக்கும் பெரிதும் பயன்தரக் கூடியதேயாகும்.

இத்தகைய நூலொன்று எழுதும்படி எம்மை வேண்டிக் கொண்டது மாத்திரமன்றி, யாம் எழுதித் தந்தவுடனே அதிவிருப்பொடு ஏற்று வாசித்து மகிழ்ந்து இது நமது தமிழுலகிற்கு இன்றியமையா நூலெனக்கொண்டு அங்ஙனே இந்நூல் சீக்கிரம் வெளிவருமாறு அழகிய புத்தக ரூபமாக அச்சிட்டு வெளியாக்கிவரும் இதன் உரிமையாளரான எம். ஜி. ஆர். நாயுடு அவர்களின் பெருந்தகை நன்றியை நயந்து வியந்து பாராட்டுகின்றோம்.

தீ. ஆ. பே.

உ

பதிவிரதா பூஷணம்.

நிற்க நெறிகாட்டு நீளறிஞர் போதத்தைக்
கற்கப் பதிவிரதா பூஷணநூ—லிற்காட்ட
எல்லா மறையும் இறைஞ்சுங் கடவுளெஃதச்
சொல்லா ரடியே துணை.

முதலாவது அத்தியாயம்.

அழகிய மாடமாளிகைகூடகோபுரங்களாகவிளங்கும் துரைத்தன சாலை, நர்த்தனசாலை, வர்த்தக சாலை, தர்ம கலாசாலை, இளைஞர் சிறுமியர் கலைபயில் சாலை, வைத்தியசாலை, வைதிகர்சாலை, சித்திரச்சாலை, கைத்தொழிற் சாலை, ஆயங்கொள் சாலை, நியாயங்கொள் சாலை ஆகிய இவ்வகைய சாலைகள் அநேகம் நிறையப் பெற்றதும், பற்பல விதமான இரதங்கள் உலாவும் மாசுத்த முடையதுமான பரந்த வீதி சாலைகளும், அச்சாலைகளின் இருபாரிசத்தும் பச்சென்றோங்கி வளர்ந்து குளிர்ந்த நிழலைத் தரும் விருக்ஷ வர்க்க சோலைகளுமாகிய நிலவளமும் நீர்வளமும், அவற்றை யனுபவித் தின்பம் பூரிக்கும் நானா வருணரும் வாழ்வுறும் சென்னைமா நகருக்குத் திலகமெனத் தக்கதாயும், பேராசை-வஞ்சம்-கொலை முதலிய துர்க்குணங்களற்ற சாதுக்களின் வாசஸ்

தானமாகியும், சமஸ்த தேவர்களின் விஜய பீடமாகியும், சைவ சமயாசாரியர்களின் திருவாய்மொழித்திருமுறைகள் மலர்ந்த மணத்துள் கமழ்ந்தெழுந்து அற்புதானந்தம் நிகழ்வித்த மூவா முழுமுதற் பரம் பொருளாகிய ஸ்ரீ கற்பகவல்லி சமேத கபாலீச்சுரர் திவ்விய க்ஷேத்திரமாகியும் விளங்காநின்ற திரு மயிலாப்பூரிலே, குரு லிங்க சங்கம வழிபாடுகளை வழுவாது நடாத்தி, நித்திய கர்மானுஷ்டானபரரா யொழுகும் ஒருவர் இருந்தார்.

அவரோ, வேளாளர்குலத்தில் திருவவதாரஞ்செய்தவர். இவர் ஆன்றோர்க்கினியர். கல்வி, கேள்வி, அறிவு, செல்வம் முதலியவற்றால் மேம்பட்டு, ஞானசம்பந்த முதலியார் என்னும் பெயரினராய்த் திகழ்ந்தார். அவரது பெருந்தவப் பயன் என்று, காண்போர் வியக்கத்தக்கவண்ணம் கற்புக்கரசியாய் ஒரு மாதூ சிரோமணி யவர்க்கு இல்லக் கிழத்தியாய் வாய்ந்திருந்தனள். அவ்வம்மையார் பெயரோ மங்கையர் நாயகம் எனப்படும்.

இவர்கள் அருந் தவத்தால் ஓர் பெண் மகவைப் பெற்றனர். "நூலைப்போல் சேலை" என்றபடி தாய் தந்தையர்களின் உண்மைக் குணங்களை பிள்ளைகளுக்கு முண்டாதல் இயல்பேயாதலின் அவ்வாறே, நற்குணங்கட்கு முன் மாதிரியாய் விளங்கிய சம்பந்த முதலியார், மங்கையர் நாயகமாகிய இவ் விருவரின் குணங்களை ஒன்றாய்த் திரண்ட தென்னும்படி அம்மகவு தனது வடிவு அமைப்பால் "நல்லாளிவள்" என்று பல்லோர் மதிக்க இலக்காயிற்று. ஆதலால், அக்குழந்தைக்குக் 'குணபூஷணம்' எனும் நன்னாமகரணஞ்சூட்டப்பெற்றது. அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ச் சுக்கில

பட்சத்துச் சுதாநிதி (மதி) போல வளர்ந்து, பேதைப்பருவங் கடந்து பெதும்பைப் பிராயம் அடைந்து விளங்கலாயிற்று.

இவ்வாறு கண்ணிற் கினிமையாய்ச் சுடர்மிகு தாரகையைப்போல உலாவிவரும் அக்குழந்தையின் சௌந்தரியத்தைக் கண்டு பேருவகை கொண்ட அன்னையாகிய மங்கையர் நாயகம், தனது அரிய தவத்தினால் கிடைக்கப் பெற்ற தன் செல்வப்புத்திரி என்றும் மங்களகரமாய் நீடுவாழ வேண்டுமென்று சதா கடவுளைத் தியானித்துவரும உள்ளத்தையுடையளா யிருந்தாள். ஒருநாள், மங்கையர் நாயகம், தனது நாயகர்பால் அன்போ டமர்ந்து இனிதாய்ச் சம்பாஷணைபுரியும் வேளையில், தனது நீடிய உள்ளக் கருத்தை நயகனிடஞ் சொல்லத் துணிந்துகூறுவாள்: "நாயகா! நமது செல்வப் புதல்வி பெதும்பைப் பருவங் கடக்குமளவி லிருக்கின்றாள். அருந்தவ முனிவர்களின் திருக்கருத்தின்படி அவள் திருமணங் கொள்ளற்குரிய நல்ல பிராயத்தை அடைந்திருக்கின்றாள். ஆதலால், அது நிமித்தமாக யான் தங்களிடம் எனது ஒரு கருத்தைத் தெரிவிக்கத் துணிகின்றேன். அதாவது; நமது அருமைக் கண்மணியாகிய குணபூஷணத்தைத் திரண்ட செல்வ முடையானுக்கே தந்து அழகு பார்க்க வேண்டுமென்பதேயாம்."

ஞானசம்பந்த முதலியார்:—"பெண்ணே! செல்வமா? அது 'செல்வோம்' என்ற இயல்புடைய தாயிற்றே; அறியாய்! வண்டியின் சக்கரம் உருண்டோடுவதுபோலப் பல இடங்களிலும் ஓடிச்செல்வதா மது. தரித்திரம் எனப்படுவதும் 'தரித்திரோம்' என்னும் இயல்புடையது,

"குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்

"அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்."

—வெற்றி வேற்கை

வறிஞன் அரசனாதலும், அரசன் வறிஞனாதலும் செல்வத் திரிபினால், மாறுபாட்டால், அல்லது செல்வத்தின் உண்மை இன்மைகளால் அல்லவா? நமது செல்வமட்டும் நம்மில் நிலைத்திருக்குமோ?

"சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்"

ஆகையால், நாயகி! செல்வத்தினுஞ் சிறந்தது கல்வி;

"மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்,"

—வாக்குண்டாம்

ஆதலால் செல்வம் அவ்வளவு சிறந்ததன்று; கல்வியே சிறந்ததென் றறிவாயாக!

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவர்க்கு
மாடல்ல மற்றை யவை."

—திருக்குறள்

"வெள்ளத்தால் போகாது வெந்தணலால் வேகாது
வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவொழியக்
குறைபடாது;
கள்ளர்க்கோ மிகவரிது, காவலோ மிகவெளிது,
கல்வி யென்னும்
உள்ளத்தே பொருளிருக்க உலகமெலாம் பொருள்தேடி
உழல்வ தேனோ?"

என்றனர் பெரியார்,

மங்கையர் நாயகம்:—"தாங்கள் கூறிய தொல்வொன்றும் உண்மையே; ஆனால், பொருளில்லாதவன் பலநூல் கற்றவனா யிருப்பினும் அவன் சிறப்புள்ளவனாக மதிக்கப்படுவனோ? "எனைத்துணையவேனும் இலம்பாட்டார் தினைத்துணையுஞ் சீர்ப்பாடில" ஆகையினாலேதான் அடியாள் செல்வம் என்று கூறத் துணிந்தது."

ஞானசம்பந்த முதலியார்:—பெண்ணே! உனது கருத்துச்சரிதான். ஆனால், 'புருஷர்களுக்குச் செல்வம் ஒன்று மட்டும் இருப்பின் போதும்' என்று யோசியாதே; அவர்களுக்கு வேண்டிய செல்வம் நான்காகும். அவையாவன:— அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். அவற்றுள் அறமெனப் படுவது முதற்கண் வைத்தோதப்பட்டுள்ள தென்றுக்கோ? வெனின், அறமே பொருளாதி மூன்றிற்குங் காரணமாதல்பற்றியேயாம். பெரியோர், விஷயங்களை வகைப்படப்பிரிக்குங்கால், முக்கியமான வொன்றையே முதற்கண்படுத்துவார்.

அறமாவது:—கொல்லாமை, மெய்ம்மை கூறல், கள்ளாமை, பிறர்பொரு ளிச்சியாமை, இந்திரிய நிக்ரகம், தவம், தூய்மை, சத்வநூ லோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல் என்பனவாகும். இவைவிதி கருமங்கள் என அறிஞரால் வரையறுக்கப் பட்டமையால் இவை அறம் எனப்பட்டன. இவற்றிற்கு மாறானவற்றை நாம் விலக்கும்வண்ணம் பெரியோர் மறுத்தனராதலால், மறுக்கப்பட்டவை மறமெனப்பட்டன. ஆதலால், அறமே போற்றத்தக்கது. அறமுடையோருக்கே தெய்வ அருள் வாய்க்கும். அருளுடையோரே இவ்வுலகத்திலும், மேல் உலகத்திலும் தலைவ ராவர். செல்வத்துட் செல்வம் அருட் செல்வமென்றும், பொருட் செல்வமென்றும் இரண்டுள. பொருட் செல்வம் பூரியரிடத்

தும், அதாவது, கீழ்மக்களிடத்தும் உளவாகும்" என்று நமது திருவள்ளுவரே கூறுகின்றார். ஆதலால், நாயகீ! பொருட்செல்வம் அவ்வளவு பெரியதல்ல; அறமே பெரியது. இந்த அறம் வாய்மையாகக் கல்வியே கருவியா யிருக்கின்றது; ஆகையால், கல்வியே செல்வத்துட் சிறந்ததென அறிக.

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்,
புறங்கடை நல்லிசையு நாட்டும்,—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும், கல்வியி னூஉங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை."

—நீதிநெறிவிளக்கம்

அவ்வண்ணம் தாயும் தந்தையும் சம்பாஷித்துக் கொண்டிருத்தலைக் குண பூஷணம் தனது மடம் என்ற இயற்கைக் குணத்தை வெளித்தோற்றி, ஒன்றும் தெரியாதவள்போன்று நடித்து, நன்றாகக் கல்வி, செல்வம் முதலியவற்றின் பெருமையினைக் கற்றுணர்ந்தாள்.

இரண்டாவது அத்தியாயம்.

மேற்படி சம்பாஷணை நடக்குந் தருவாயில் வைதீகம நிறைந்த மார்க்க சகாய தேசிகர் எனும் பெயரிய ஒரு பெரியவர், அவர்கள் வீட்டின் வாயிற்கு வந்தார். வந்தவர் சிறிதுநேரம் இவர்களின் சம்பாஷணையின் நயத்தை வெளியினின்றும் இன்ப மாகக் கேட்டுக்கொண் டிருந்து,பின் உள் நுழைந்து "ஐயா!, யான் உட்பிரவேசிக்க உத்தரவுதானோ?" என்றார்.

அவ்வீட்டு நாயகனாகிய ஞானசம்பந்த முதலியார், அந்தச் சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்துவந்து, பெரியவரென் றறிந்து, உள்ளங் குளிர்ந்து, "ஸ்வாமிகாள்! தங்கட்குத் தரிசிக்கப் பெற்றது எங்கள் பாக்கியமேயாம் வம்மின்" என்றார்.

மார்க்க சகாய தேசிகர்.—நண்பரே; நீரே உத்தமர்; தங்களின் வாழ்க்கையே நல்லறம்; நீர் நீடுவாழ்க! உங்களுடைய சல்லாபத்தை யான் கேட்க என் மனம் இசைந்து சற்று நிறுத்திற்று மனிதரென்றால் எல்லோரும் மனிதராகார்.

"மனிதரிலும் பறவையுண்டு, விலங்குண்டு,
கல்லுண்டு, மாமு முண்டு.
மனிதரிலு நீர்வாழுஞ் சாதியுண்டு,
அநேககுல மனித ருண்டு,

மனிதரிலு மனிதருண்டு வானவரு
மனிதராய் வருவ துண்டு,
மனிதரிலும் பிறப்பறுக்க வந்ததே
யருமையென வகுத்தார் முன்னோர்.”

—சிவானந்தபோதம்.

மனித உடம்பு போர்த்துள்ள போலிகள் பலர் வேட்டையாடுதல், சொக்கட்டாடுதல், பகற்பொழுது தூங்கல், அபவாதங் கூறுதல் எப்பொழுதும் பெண்களோடு கூடியிருத்தல், செருக்கடைந்திருத்தல், ஆடல் பாடல்களாதி வாத்தியங்களை வாசித்துப் பொழுது போக்கல், எப்பொழுதும் வீணாகச் சஞ்சரித்தல் ஆகிய இவற்றால் காலங்கழிப்பராம்.

அவ்வாறு பிழையுள்ளவற்றைக் கொள்ளாமல், நீர் கொண்ட நல்லசம்பாஷணை உமது குமாரத்திக்கும் சற்போதமாய்ப் பயன்படும். இத்தகையதுதான் மங்கையருள் கற்பென விளங்கப்படுவது. ஆதலால், யானும் சில அறநெறிகளைக் கூற விரும்புகிறேன். உத்தரவு தானோ வென்றார்.

ஞா. ச. முதலியார் :—பெரியீர்! என்னே! பழம்பழுத்துப் பாலில் விழுந்தால் வெறுக்கின்றவரும் உண்டோ? மூத்தோர் சொல்லமிர்தம், கரும்பு தின்னக் கைக்கூலியும் விரும்புவரோ! ஸ்வாமிகள் சித்தத்தை விரிவாகவே விளக்க வேண்டும்.

மா. ச. தேசிகர் :—அப்படியே யாகுகவென அகங்களித்துக் கூறுகின்றார். தாங்கள் தங்கள் பத்தினி முறையே கல்வி, செல்வம் என்பதைப்பற்றி வெகுவாகவே பேசி முடித்தீர்கள். கல்வியும், செல்வமும், மற்றவையும் மக்களுக்கு முன் செய்த வினையின்வழி வருவதாகும்.

“பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்கா டென்னும்
மாறுமுன் கருவுட் பட்ட தவ்விதி யனுப வத்தா
லேறிடு முன்பு செய்த கன்மமிங் கிவற்றிற் கேது
தேறுநீ யினிச்செய் கன்ம மேலுடற் சேரு மன்றே?”

சிவஞானசித்தியார்.

ஆதலால் ஒருவன் தான் நினைத்தபடியே பலனடைகிறதில்லை. கல்வியும் செல்வமும் நிறைந்த ஒருவனே உமக்கு மருகனாதல் வேண்டுமென்பது உங்கள் பிரியம். ஆனால், தாய், தந்தை, மக்கள் முதலிய சுற்றங்களும், மற்றவையும் பூர்வ வினையின் பலனாகவே பொருந்தும் என்பது அநுபவிகளின் சம்மதமாம்.

“தாய்தந்தை மக்க ளுடன்பிறந்தார் சுற்றத்தா
ராய்வந்து தோன்றி யருவினையால்—மாய்வதன்கண்
மேலைப் பிறப்பு மிதுவானான் மற்றென்னை
கூலிக் கழுத குறை”

—அறநெறிச்சாரம்

உதாரணமாக, திரௌபதியின் வரலாறு சிறிது கூறுகிறேன்; கேட்பீராக!—திரௌபதி முற்பிறப்பில் நளாயினி என்று பெயர் பெற்றிருந்தாள். அவளுடைய கணவன் மௌற்கலியன் எனப்படுவான். இவன் தனது மனைவியின் கற்பினுறுதியையும் அன்பு நிலையையுஞ் சோதிக்கக்கருதி, மிகுந்த குஷ்டநோயும் அதனாற் சிதைந்த வடிவமும், அதிக கிழத்தனமும், எப்பொழுதும் பெருங் கோபமும், உடம்பில் துர்க்கந்தமும் உடையவனாகத் தன்னைக் காட்ட, அப்பொழுதும் அவள் அவன்பால் அன்பு சிறிதுங் குறையாமல், அவனுக்குப் பலவகை உபசாரங்களையும் தவறாமல் சித்த சுத்தியோடு புரிந்து, முறைப்படி அவனுண்டு மிகுந்த எச்சிலைத் தானுண்டு

வாழ்ந்திருக்கையில், ஒருநாள் அவனுண்ட மிச்சிலில் அவனுடைய கைவிர லொன்று அற்று விழுந்து கிடக்கக் கண்டும், அவள் சிறிதும் அருவருப்புக் கொள்ளாமல், அதனையெடுத்து வைத்துவிட்டு அவ் வுணவை அன்போடு உண்டாள். அங்ஙனம் அவள் பலநாளும் நிலைகுலையாமல் வழிபட்டு வருவதை மௌற்கலியன் பார்த்து, மிகுந்த திருப்தி கொண்டு, தனது நோய்வடிவத்தை யொழித்துத் தவமகிமையால் மன்மதனைப் பார்க்கினும் அழகிய வடிவங் கொண்டு, நளாயினியை நோக்கி, "உனக்கு வேண்டும் வரத்தைக் கேட்பாயாக!" என்ன அவள், வேறொரு வரத்தையுங் கேளாமல், "தேவரீர் அன்பு எப்பொழுதும் என்னிடம் நீங்கா திருத்தல் வேண்டும்" என்று சொல்ல, அவ்வண்ணமே அவன் உடன்பட்டு, ஐந்து வடிவங் கொண்டு இவளோடு கூடிவாழ, இவ் விருவரும் இங்ஙனம் நெடுங்காலம் கழித்தபின், நளாயினி என்னும் உத்தமி மாயா உலகத்தினின்றும நீங்கி மறுபிறப்பில் இந்திரசேனை என்னும் பெயருடையளாய் அவனிடம்வர, அப்போதவன் தவஞ்செய்யுங் கருத்துடையவனாகி அவளுக்கு இடங் கொடாமல் விட்டுச் செல்லும்போது, இந்திரசேனை தபசியை நோக்கி, "யான் இனி என்செய்வது?" என்று வினவ, அவன் கட்டளைப் படி அர்த்தநாரீஸ்வர மூர்த்தியை நோக்கித் தவஞ் செய்து, வரப்பெற்று, அடுத்த ஜென்மத்தில் திரௌபதியாய்த் தோன்றிப், பஞ்சபாண்டவரை மணஞ் செய்து வயழ்ந்தன ளென்பது பாரதப் பிரசித்தம்.

இதுதானேயு மன்றி, அரிச்சந்திரன் முற்பிறப்பில் நீலலோகிதன் என்னும் அரசனாகி மூவுலகாண்டவன், அவன் பத்தினியாகிய சந்திரமதியும், முற்பிறப்பில் சோதிமா என்னும் வேந்தரின் புத்திரியாயிருந்து, பின்னர் மதிதயன் புத்திரியிற்

றாள். லோகிதாசன் என்பானும் நளகூபரன் அம்சத்திற் பிறந்தவன். இன்னும் நளன், கோவலன், கண்ணகி முதலிய ஒவ்வொருவரும்போல் நாமும், முற்பிறப்பின் முறைப்படி, இப் பிறப்பில் பிறந்திருப்பதாக முன்னோர் கூறியுள்ளார்.

"அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
அப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
மூடனா யடியேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
வென்செய்வேன் கச்சி யேகம்ப நாதனே."

—பட்டினத்தார்.

இவ்வாறாக, பந்துக்களும், மற்றியாவர்களும்பூர்வ வினையின்வழியே இனி உறவாகின்றவர்களா யிருத்தலால், நமது பூர்வவினை யின்னதென்று தெரிந்தா லல்லவோ நமக்கு மருகன் முதலியோர்களாய் வாய்க்கப்படுவோர் இத்தன்மையுடையவராய் இருப்பாரென்று தெரியக்கூடும், 'வீணோநாம், செல்வம் கல்வி முதலியவற்றைப் பற்றியும், அவற்றையுடையவரே உறவாக வேண்டுமென்றும் வீண் மனோராஜ்யஞ் செய்வதைவிட, நல்வினை தீவினையென்ற நடுதீர்க்கும் ஆற்றலுடைய கடவுளை நோக்கித் தியானித்து நிற்போமாயின் மனஞ் சுத்தமாகும்; அந்தச் சுத்தியால் நல்லகுணம் உண்டாகும்; அந்த நற்குணத்தினால் நல்லோர்களின் சினேகம் வாய்க்கும்; நல்லோரிணக்கத்தால் தாங்கள் கருதிய வெல்லாம் சித்தியாகும். இதற்கு ஐயமேயில்லை."

"ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே
அடக்குவித்தா லாரொருவ ரடங்காதாரே

ஓட்டுவித்தா லாரொருவ ரோடாதாரே
உருகுவித்தா லாரொருவ ருருகாதாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே
பணிவித்தா லாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே.”

என்றார், நம்மையாளும் திருநாவுக்கரசு சுவாமிகளும்.

ஆகையினாற்றான் இவ்வாழ்க்கையினருக்கு விரத முதலிய விதிகளை ஏற்படுத்தினர் மூதோர் விரதத்தால் வேண்டுங் காரியசித்தி யடையப்படும். விரதங்களோ “சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கௌரி விரதம், சாவித்திரி விரதம்” முதலியவற்றைப்போல, “வார விரதம், மாத விரதம், வருட விரதம்” எனப் பல விரதங்கள் உள; “விரத பலித்தினால் பயனென்னை?” என்னும் சந்தேகந் தருமாறு புராணங்கள் ஒவ்வொன்றும் ‘பலன் தரக்கூடியவே’ எனக் கூறுநிற்கும். சீமந்தனி முதலிய அநேக பதிவிரதைகள், விரத மகிமையில் பெரும் பேறு பெற்றிருக்கின்றனர், இதனைப் பிரமோத்தர காண்டத்தில் காண்க. இவை தவிர. நித்திய கர்மானுஷ்டான விரதங்கள் எனப் பலவுள.

“ இருந்து மாயுள் சிதையுமென் றெண்ணித்தம்
பொருந்து காதலர் நாமம் புகன்றிடார்
இருந்த போதன்றித் தாமுள் ளிருந்திடார்
அருந்து மிச்சி லமிழ்தி னுகர்வரால்!”
“ இல்ல றத்திற் கிசைவன் வீட்டுவார்
அல்ல செய்தே லறிதி னழித்திடார்
புல்லு காதல ராயுட் பொலிவுற
மல்ல லோங்கலி மஞ்ச ளணிவரால்.” —காசிகாண்டம்.

“ பதிவிரதா சிரோமணிகள் தங்களின் கணவரது ஆயுள் குறையா திருக்கவேண்டு மென்ற சிந்தனையால், கணவரின்

பெயரையும் வாயால் புகலமாட்டார்கள். கணவரது ஆயுள் மேன்மேலும் நீடித்திருத்தல் வேண்டித் தமதழகிய உடலில் மஞ்சள் அணிந்து கொள்வார்கள். இவைபோல்வன நாடோறுஞ் செய்யப்படுகின்றமையால் இவற்றை நித்திய விரதமெனலாம்” என்றனர் தேசிகர்.

உத்தமரே! நான் இங்கு வந்து வெகு நாழிகையாயிற்று தங்களின் இனிய சம்பாஷணை நயமே இங்கென்னையபர்த்தியிவ்வளவும் பேசிக்கொண்டிருக்க வைத்தது. நீங்கள் கடவுள் அருளால் நீடூழி வாழ்க! நான் போய் வருகிறேன்” என்றார்,

இவற்றை யெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த முதலியாரின் அரும் பெரும் மனைவி, விரைந்தெழுந்து, மெள்ளத் தன் நாயக னருகிற் சென்று, “என்னுங்கோ? போகிறாரே சீமந்தினி சரிதத்தைப் பிரமோத்திர காண்டத்தில் பார்க்கும்படி கற்பித்தார்களே. சாவித்திரியின் சரித்திரத்தைச் சொல்லும்படி கேளுங்களேன்,” என்று நாயகன் காதில் இரகசியமாய் ஓதிப் பின்புறமாய் ஒதுங்கி நின்றனள். ஞானசம்பந்த முதலியாருக்கு அவற்றைக் கேட்கப் பிரீதியேயாயினும், தனது காதலி தூண்டிவிட்டது பின்னும் பலப்படுத்தினமையால், முதலியார் தேசிகரை இரந்து நோக்கி, “தேவரீர் தக்க சமயத்தில் அருளிய சற்போதம் யாங்கள் மறவாமற் கொள்ளும் மருந்தாயிற்று. தாங்கள் திருவுளங் கனிந்து அடிமையின் செவியில் நுழைத்துவிட்ட சாவித்திரியின் சரித்திரத்தை யாங்கள் என்று தெரிந்து கொள்வது? தங்கள் தரிசனம் அடியேங்களுக்கு வாய்ப்பதென்று?” என்றார்.

மா. ச. தேசிகர் :—“ நாளைப்போதே யான் வருவேன்” என்று அன்புடன் விடைபெற்றேகினார்.

18.1.47

மூன்றாவது அத்தியாயம்.

பின்னர் முதலியார் தனது நாயகியையும், குமாரத்தியையும் பார்த்து, "கேட்டீர்களா! நளாயினி எவ்வளவு உத்தமசாலி."

"அழகின் வீக்கஞ் சிறிதில ராயினும்
ஒழிவி னோய்நிரம் புற்றன ராயினும்
கிழவுத் தன்மைய ராயினுங் கேள்வரைப்
பழுது சொல்கலர் பண்பின் முயங்குவார்."

—காசிகாண்டம்.

"கணவராயினார் சிறிதும் அழகுடையரல்ல ராயினும், எப்போதும் பிணியே நிறைந்தவராயினும், அவர்களைக் குறைகூறாது அன்போடு தழுவி வாழ்வர் நல்ல குடிப்பிறந்த கற்பினல்லார்கள்."

"ஒருவருக்குத் திருக்கலியாணம் நிறைவேறல் சிவன் செயல்" என்றும், "கணவனைத் துரோகஞ் செய்தல் சிவத்துரோகமாம்" என்றும் மூத்தோர் வாக்கியப்படியேயமையும்.

இத்தகைய குணம் நளாயினியிடமே பிரகாசிக்கின்றது. இக்காலத்திலே அவ்வித குணங்களமையப் பெற்ற மங்கையரும் இருக்கின்றார்களோ? அந்தோ! ஒரு விவாகம் முடித்தற்கு மணமக்களின் பெரியோர்கள், நாம் சம்பாஷித்தபடியும், நாம் இப்போது பெரியவரிடம் கேட்டபடியும், எவ்வளவோ சிந்தனையும், செய்கையும், தேக கஷ்டமும், பொருள் விரயமும் உடையவர்களாகி, அந்தச் சுமங்கலியதாரணஞ் செய்விக்கின்றனர். பின்னர் பொருத்த நிமித்தமாதி ஐதீ

கங்களெத்தனை? ஐபகோ! கணவனாவான் தான் இளம்பருவத்தி லிருந்து கற்ற கல்வி, செல்வம், புகழ், வயது முதலியவற்றின் பெருமைகள் எத்தனை? இவை யாவும் சிறிது போதினில் அழியுமாறு புல்லிய மாதர் சிலர் சோரம் புரிகின்றனரே; நல்லவர்கள்போல் பாவனை காட்டித் தமது அருமைக் கணவனைப் படுகுழியில் தள்ளுகின்றார்களே நாயகி!

இந்த நளாயினியின் நற்குண நற்செய்கைகளுக்கு முற்றும் மாறான ஒரு பொல்லாக்கதை யொன்று சில நாளைக்கு முன் யான் வாசித்தது இப்போது என் ஞாபகத்திற்கு வருகிறது சொல்லுகிறேன் கேட்பாயாக!

வகாம்பூர் என்னும் ஓர் கிராமத்தில் கன்னி என்ற ஒருவள் இருந்தாள். அவளோ மகா பதிவிரதைபோல் நடித்துத் தன் கணவன்பால் அன்பு பாராட்டி வந்தாள். கணவன் தன் விதிவசத்தால் இறந்ததும், அப் பதிவிரதையோ மிகத் துயரடைந்தவள் போல் மரித்த கணவன்மீது விழுந்து விழுந்து உலகு மெச்சத்தக்க உபாயங்களைத் தழுவிக் கூக்குரவிட்டுச் சொல்லி அழுது புரண்டு கிடந்து, பிரேதத்தைப் புதைக்கத் தூக்கும் சமயத்தும், "யான் என்கணவனை விட்டுத் தனியே இரேன்; என்னையும் என் கணவனோடு வைத்துப் புதைத்துவிடுங்கள்!" என்று கெஞ்சித், தேம்பிய குரலோடு பிரேதத்தோடே பின்தொடர்ந்து சென்றனள். சவத்தை மயானத்திற் புதைக்குந் தறுவாயில் ஆங்குற்ற ஆடவர்கள் இப் பெண்மணியின் பதிவிரதா வைராக்கியத்தை முற்றும் நம்பிப் புகழ்ந்து, "அம்மே!

"வினைப்போகமே யித்தேகங் கண்டாய் வினைதா னொழிந்தால்
தினைப்போ தளவும் நில்லாது கண்டாய் சிவன் பாதநினை"

என்றார், நமது பட்டினத்தடிகள். வினையின் காரணமாக உண்டானது இத்தேகம்; இத்தேகத்திற் கமைந்த வினை

யொழிந்தால் தேகம் நீங்கிவிடும்; பிரமாதி தேவர்களும் ஓர் காலத்தில் அழிவார்கள். நீ இம்மாதிரியாக வருந்துவதை யொழிவாயாக; உன் காலம் முடிவுறும்போது நீ இறவாமல் இருக்கப்போகின்றாயா! என்னே யுன் பேதைமை? அம்மே! நீ எழுந்து உன் வீட்டிற்குப் போ." என்றார்கள். இவளோ! "ஐயா என் கணவனை விட்டு ஒரு விநாடியும் தனித்திரேன்; நான் இந்த மயானத்தில் என் புருஷனிடமே இருப்பேன் நீங்கள் போய்வாருங்கள்." என்று அவர்களை யனுப்பிவிட்டுச் சுடுகாட்டில் உட்கார்ந் திருந்தாள். அப்போது அச் சுடலையைக் காக்கும்தோட்டி இவளிடம் வந்து, இவள் வரலாற்றை விசாரித்துக்கொண் டிருக்கும்போது, சிறிது நேரத்தில் இருவரும் ஆசையில் சிக்குப்பட்டு விட்டார்கள். பிறகு, தோட்டி சுடுகாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவதாக அவளிடம் விடைபெற்றுப் போனான். அங்கே ராஜாங்கத்தாரால் முன்னமே தூக்கிடப்பட்டிருந்த ஒருவன் பிரேதத்தை ஊர் வழக்கம்போல் மயானத்தில் தூக்கிவிட்ட சவத்தை மறுதினம் அதிகாலையில் அப்பிணத்தின் சுற்றத்தார் சுடலைக்கு வந்து தோட்டியைப் பல விடங்களிலும் தேடியும் காணப்பெறாமையால், அப் பிணத்தை எடுத்துக்கொண்டு போய்விட, பிணம் அங்குக் காணாமையால் தோட்டி மிகவும் பயந்து, அதிகாரிகளுக்கு என்ன பதில் சொல்லுவேன்? இங்கு வந்து நம்மை இவ்வளவு அபாய நிலையில் விட்டது பெண்ணோ அல்லது பேய்தானோ மோசக்காரி; இவளை என்ன செய்கிறது? என் வேலைக்கு ஆபத்தைத் தேடினாளே." என்று திகிலுடன் அவளருகில் சென்றான்.

இவளோ தோட்டியைக் கண்டவளவில், சூரியனைக் கண்ட தாமரை மலர்தலைப்போல முகமலர்ச்சி கொண்டவளாய், "ஸ்வாமி! தாங்கள் சோர்ந்திருப்பதற்குக் காரணம்

யாது?" என்றாள். இந்த ஆசார வார்த்தையைக் கேட்டவளவில், தோட்டி, தன்னைத்தானே ஒரு பெரிய மகானாய் மதித்துக்கொண்டு, "அடி! உன்னாலே என் வேலைக்குத் தீங்கு நேர்ந்து விட்டதே; உன்னோடு யான் இங்கிருந்துவிட்டதால் அல்லவா தூக்கில் மாட்டுவித்திருந்த பிணத்தை இழந்துவிடற்கானேன். இப்போது என் அதிகாரிகளுக்கு என்ன சொல்வேன்? எங்கிருந்து வந்தாய் என்னைக் கெடுப்பதற்கு?" என்று சினந்து வைதான். இறந்த கணவனோடு உடன்கட்டையேறுவதாய் நடித்த இவள் தோட்டி நாயகனைப் பார்த்து, "ஐயா! என்ன நீர் ஒரு ஆண்பிள்ளையா யிருந்தும் ஓர் அற்ப காரியத்தில் மனந் தளர்ந்துவிட்டீரே! இதோ இந்தக் குழியில் சற்று நேரத்திற்கு முன்னிட்டுத் தானே ஒருவன் புதைக்கப்பட்டான்; அந்தப் பிணத்தை யெடுத்து அந்தத் தூக்கில் மாட்டிவிடக் கூடாதா?" என்றாள் அப்படுபாவி.

"தோட்டி' தனக்குச் சமயத்தில் மந்திரிபோல் ஆபத்துத் தீரும்படி தந்திரோபாயம் எடுத்துக் கூறிய நங்கையைப் புகழ்ந்து, பிணத்தைக் குழியினின்றும் எடுத்து, இவர்களிருவருமாகப் பிணத்தைத் தூக்கிவிட்டார்களாம்,"—என்றதும் மங்கையர் நாயகம் இக் கதையைக் கேட்ட மாத்திரத்தில், "அந்தோ! ஈதென்ன கொடுமை! இத்தகைய துஷ்டைகளுக்குத் தண்டனைதானு மில்லையோ? நாயகா! இக் கதையை எனக்கேன் நீர் சொன்னீர்? நளாயினியின் திவ்விய சரித்திரங் கேட்டுச் சந்தோஷமடைந்த என் உள்ளத்தை இப் பாதகியின் கதை புண்படுத்திவிட்டதே" என்றாள்.

ஞா. ச. முதலியார்:—"வெயி லில்லாமல் நிழல் ஒன்றே இருப்பின், நிழலின் அருமை இவ்வளவென்று அறியப்படுமோ! உலகம் சதா ஒளியுடையதாகவேயிருப்பின்,

அதன் பெருமை இவ்வளவென்று அறியப்படுமோ! அது போல், கொடிய துன்மார்க்க மடந்தைகள் இருப்பதினாலே தான் நளாயினி முதலிய பதிவிரதா சிரோமணிகளின் மேன்மை நன்கு விளங்குகின்றது. 'ஆனால், துஷ்டைகளுக்குத் தண்டனைதான் இல்லையோ?' என்றாயே! சொல்லுகிறேன் கேட்பாயாக! என்றுசொல்ல ஆரம்பித்தார்.

"எதி லான்ற னெழில் கண் டுவப்பவர்
பேது செய்தழல் பேயுரு வெய்துவார்
காத லன்பசிக் கக்களித் துண்பவர்
பாத கஞ்செயும் பன்றியிற் றோன்றுவர்."

"கொழுநர் சீறிற் குறுகிமுன் வைபவர்
உழுவை யாகப் பிறப்ப றுத்துவெஞ்
சுழல மாற்றவட் சீறு மறிவிலோ
கழல்கீட் கூகைப் பிறப்பிற் கழிவரால்."

—காசிகாண்டம்.

கணவரை மதியாதாரும், வஞ்சிப்பாரும், சோரம்புரிப வருமாகிய மாதர்கள் நைவரேயெனத் தெள்ளிதில் எடுத்துக் காட்ட, அகலிகை கல்லாகச் சபிக்கப்பட்டதே போதிய சாட்சியாமன்றோ? அகலிகை என்பாள் கௌதமரிஷியின்பத்தினி இவள் தேவேந்திரனால் வஞ்சிக்கப்பட்டுச் சோரம் புரிந்தமையால் கற்பாறையாயினாள். அவ்வாறே துஷ்டைகள் கழுகு முதலிய தீய பிறப்படைந் தழிவர்.

செய்யத்தக்க தெனப் பெரியோர் விதித்த சத்கருமங்களைச் செய்யாமல், மீறிப் பொல்லாச் செய்கையாகிய சோரம் முதலியவற்றைச் செய்யத் துணிந்து உடன் பட்டாரைத் தமது உள்ளமே கூரியவாளாயிருந்து வருந்தவைப்பதுங் காட்சியன்றோ! இத்தகைய வருத்தத்தையே "அறக்கடவுள் தண்டனை" என்று கூறுவர் கற்றோர்.

"நற்காட்சி யில்லா ருணர்வு மொழுக்கமும்
ஒற்கா வொசிந்து கெடும்."

—அருங்கலச் செப்பு

"கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
யெச்சமற் றேமாந் திருத்த லன்றே."

"அறத்தைப் போற்றா தழியும் மக்களைப் பெற்று அவர்களால் பழிப்புண்டு அவமானப் படுவதைவிட, அம்மக்களின் தாய்தந்தையராதியர் "யாங்கள் மலடரே; எங்கட்கொரு புத்திரப்பேறு என்று வாய்க்குமோ?" என ஏங்கியிருத்தல் நல்லதாம் என்றார் பெரியோர்.

ஆகையால், நாயகி! "துஷ்டைகள் நாசமாவார்கள்" என்றார்.

மங்கையர் நாயகம்:—நாளை காலையில் தேசிகர் வருவாராகில் அவரை நமது வீட்டில் அமுது உண்ணுமாறு பிரார்த்தித்துக்கொள்வோம்; அவர் புகன்றபடி சாவித்திரியின் சரித்திரத்தையும், பின்னும் பெண்களின் கற்பின் இலக்கண முதலிய பல நீதிகளையும் அவரால் கேட்போமாக! அவை நமது புதல்விக்கும் சற்போதமாகும் அல்லவா?" என்றாள்.

ஞா. ச. முதலியாரும் ஒரு மனப்பட்டுத் தேசிகரின் தரிசனத்திற்கு எதிர்நோக்கி யிருந்தார்கள்.

நான்காவது அத்தியாயம்.

இவ்வண்ணமாக நாயகனும், நாயகியும் ஒவ்வொரு காரியத்திலும் மனவொருமை யுடையவராய் வாழ்தலே அறமாகும். அறவோர்க் களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க் கெதிர்தல் ஆகிய இவையே இல்வாழ்க்கையிற் சிறந்த அறமாகும். இவற்றை இயல்பாக வுடைய மங்கையர் நாயகம், தேசிகரை யெதிர்பார்த்திருந்ததும், தனது அன்பு, அக்டகம், வாய்மையும் போற்றத்தக்கதே. இத்தகைய குணமுடையமனைவியை யுடையவனல்லவோ "உலகில் மனித ஜென்மத்தில் மிகச் சிறந்தவன்" என்று போற்றப்படுவான்.

அடுத்த நாள் தேசிகர் வந்தார். நாயகனும், நாயகியும், தேசிகரை வணங்கி நமஸ்கரித்து, ஆசனந் தமர்த்தினர். சிறிது நேரம் அவருடன் அன்பமைந்த மிருதுவான வார்த்தைகளாடிக்கொண்டிருந்து, முதலியார், தேசிகர் திருமுக நோக்கி, "ஸ்வாமி! அடியேன் தங்கட்காகத் தயாரித்து வைத்த அமுதினையேற்று அடியேனைப் புனிதனாக்க வேண்டும்" என வேண்டினார்.

மா. ச. தேசிகர் :—முதலியாரது உபசார நயத்தால் அவரது உள்ளன்பினைத் தேர்ந்து,

"ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்."

என்றபடி, மறுக்கக் கூடாதவராய், அப்படியே யாகுக!" என்று முதலியாருட னமர்ந்து, அமுதுண்டு, தாம்பூலந் தரித்து, ஆசனத்தில் வீற்றிருந்தார்.

அப்போது முதலியார் தேசிகர் திருமுக நோக்கி, "ஐயன்மீர்! நீர் நமதகத்தை மிதித்த நாழிகை தொடங்கி, இதுகாறும், சத் சம்பாஷணையையே மிகுக்கவைத்தது உமது அரிய போதம். தாங்கள் கூறியவண்ணம் சாவித்திரியின் சரித்திரத்தைத் தயை செய்மின்." என்றார்.

மா. ச. தேசிகர் :—"சொல்லுகிறேன் கேளுங்கள்." சாவித்திரியோ மகா பதிவிரதை, இதனைக் கூறுமாறு நீர் வினவியபோது என்னையும் அறியாது கடந்தவற்றைப்பற்றிய அநுதாபமொன்று என்னுள் எழுகின்றது.

"தந்தைதாய் சோதரருற் றாரையெலாங் கைவிடுத்துத்
தன்னைச் சார்ந்த
பைந்தொடியை யனையவர்போ லாதரிக்கக் கணவனுக்கே
பரமா மாதி
அந்தமிலான் முதற்றெய்வம் பதியிரண்டாந் தெய்வமென
அவரைப் போற்றிச்
சிந்தைதனி னினைத்தொழுகுஞ் சேயிழைபூ வையர்க்கெல்லாக்
தெய்வ மாமே."

அப்பா :—"தந்தை, தாய், அண்ணன், தம்பி முதலிய உறவினர் பலர் இருப்பினும் அவர்களை யெல்லாம் விட்டு,

"ஆரு மற்றதே தாரம், ஊரி லொருவனே தோழன்"

என்றபடி, நாயகன் ஒருவனே கடவுள்; தந்தை, தாயாதி பந்துக்கள் முன்னிலையில் கடவுள் சாட்சியாய்த் திருமணஞ் செய்து கொண்ட மனையாட்டியை நீதியுடன் காப்பது கணவனது கடமையாம்."

"காதத் திருகண்ணிற் கொண்டே மணிகலந் தாங்கிருவ
ராகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமா

மேகத் தொருவ னிரும்பொழி லம்பல வண்மலையிற்
றேகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்ப துன்பங்களே.''

—திருக்கோவையார்.

'' எப்பணியா லின்புறுவர் காதலரக் காதலரை
யப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி—யொப்ப
மனங்குழையும் வண்ண மகிழ்விப்ப தன்றே
கனங்குழை யார்கள் கடன்.''

—பெருந்தேவனார் பாரதம்.

காகத்திற்கு இரண்டு கண்களிருப்பினும் அஃது ஒரு கண்வாயிலாகவே பொருட்களைக்கண்டு அறிதல் போலவும், அம்மை அப்பன் எனும் ஈருடலாயிருந்து வியூகமாய் ஈசனொன்றே விளங்குகின்றபடியும், குலமகள் தன் கொழுநனுக்கு நிகழும் இன்பமும் துன்பமும் அந்நியமாகக் கொள்ளாமல் தன்னுடைய தாகவே கொண்டு, எந்த விதத்தால் காதலர் மகிழ்வார்களோ வென,

'' மேவு காதல ருள்ளம் விழைந்தன
வேவு முன்னர் குறிப்பினி லாற்றுவார்
தாவி லன்பர் தமையலர் தூற்றினும்
பூவை யன்னவர் புன்முக நோக்கிலார்.''

—காசிகாண்டம்

காதலருடைய குறிப்பினை அறிந்து அவர்க்குக் கோபமுண்டாகாவண்ணம் அவர்கள் வையினும் தமதழகிய முகத்தைக் கோணாமலும், காதலர் குறிப்பைக்கண்டு அவர் விரும்பும் பணிவிடையே புரிந்து, அவர்களை அன்பு மிகுக்கச்செய்தலும், கொழுநன் மரிப்பனாயின் தானும் உடன் மரித்தலும், (காலத்தை அநுசரித்து அப்படிக் கூடாமையே யாயினும்) நறுநெய் முதலிய இன்சுவை சம்பாரங்களைப் புசித்தலையும், உயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்காரஞ் செய்து

கொள்ளுதலையும் நீக்கிக், கையாற் பிழிந்து கொள்ளப்பட்ட நீர்ச்சோற்றுடனே வெள்ளிய எள் அரைத்த விழுதுடன் புளிகூட்டிச் சமைக்கப்பட்டவற்றை உணவாகக் கொண்டு, பருக்கைக்கற்கள் கிடக்கும் படுக்கையின்கண் பாயு மில்லாமல் கிடக்குங் கைம்மை விரதம் உடையவர்களாகவும் வாழ்வர் குலமங்கையர் இத்தகைய அன்பினையே உழுவலன்பு என்பர்.

'' உழுவ லெழுமையும் தொடர்ந்தவன் புரைக்கும்.''

—சேந்தன் திவாகரம்.

இத்தகைய எழு பிறவியினுந் தொடர்ந்த உழுவலன்புடையராயுள்ள குல மங்கையர் இருக்கையே இல்லற வாழ்க்கையாம்.

'' இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை.''

என்றபடி, குலமங்கையர் வாசத்தால் கொழுநனுக்குக்குறைவு ஒன்றுமேயில்லை. நல்லறிவுடைய கொழுநர்கள் உத்தம மாதரை தங்கள் உயிர்நிலைபோற்கருதி அவர்களுடன் வாழ்வார்களாக.

அன்பரே ! இவ்வளவும் சொல்ல வைத்தது எனது மனஆராமையே ; திருவருள் சம்பந்தத்தால் எனக்கு மனையாட்டியாய் வாய்ந்திருந்தது ஓர் மணி. அவள் என்பால் ஒழுகிய சன்மார்க்கங்களைச் சொல்வேனேயாகில் அது தற்பெருமையே யாகும். அந்த மாதின் குண நலத்தை நினைந்து நினைந்தே வருத்த மடைந்து. இதுகாறும் பன்னிரண்டு வருடங் கழிந்ததும் மறுமணஞ் செய்து கொள்ளாமல் அவள் இறந்த மாதமே செய்ய வேண்டிய உத்திரகிரியையாதி கருமங்களை முடித்து, தட்சணமே துறவு மேற்கொண்டு விரக்தனாகத் திரியலானேன். நண்பரே ! துஷ்டைகளின் செய்கையைச் சொல்லுகிறேன் கேளுப !

கணபதி விலாஸ் வாஸகஸா
201/10-ஹைரோட்
செங்கல்பட்டு.

"அடுத்தமனை தொறுந்திரிவாள் கணவனுக்கு முன்னுண்பா
ளடக்கமில்லாள்
கடுத்தமொழி பேசிடுவாள் சிறுதனத்தே வெளிவலைக்
கலந்துவாழல்
எடுத்தகொடி விடையாரே தண்டலையாரே சொன்னேன்
எவரும் போற்ற
குடித்தனமே செயவேண்டிப் பிடாரிதனைப் பெண்கொண்ட
கொள்கை தானே."

—தண்டலையார் சதகம்

நண்பரே! வீடு வீடாய் நுழைந்து திரிதலும், ஆடல் பாடல் நாடகங்களுக்குச் செல்லுதலும், தனது புருஷன் சாப்பிடுவதற்குமுன் சாப்பிடுதலும், அடக்கமற்றவளாயிருத்தலும், சினந்துமொழியாற்றலும், புருஷனை வஞ்சித்துப் பணஞ் சேர்த்துக்கொள்ளலும், புருஷனுக்குத்தெரியாமல் அன்னியரிடம் கடன் வாங்குதலும் ஆகிய இவை தீப்பெண்டிர் குணங்களாகும். இத்தகையினரைப் பிடாரியெனக் கூறலாமேயன்றிப் பெண்ணெனல் அவர்கட்குப் பொருந்தாது. பெண் என்ற சொல்லை நோக்குங்கால், காணுந்தொழில் உடைமையால் விழிக்குக் கண் என்ற பெயர் அமைந்ததைப் போலப், புருடனைப்பேணுந் தொழிலால் அவர்கட்குப் பெண் என்ற பெயர் அமைந்ததென்பார்" கற்றோர்,

இவ்வித தீக்குணங்கள் சிறிதேனும் இல்லாள் எனது மனையாள். இங்ஙனம் 'இல்லாள்' என்ற சொல்லிற்குத் 'தீய குணம் இல்லாதவள்' என்றும் பொருள்படும். ஆதலினாலே, தன் ஆருயிர்க் காதலனை மறு பிறவியிலேனுங் கூடி வாழலாமெனப் பெண்கள் கைம்மை விரதங்கொண்டொழுகுவார் அதுபோலச் சற்குண சீலியாகிய என் காதலியைக் காண்பேனோ என்பது என ஏக்கம்.

எனது வரலாறோ கூறப்புகின் அதுவெகுவாகவே நீளும். ஒருவன் தனது தாரத்தைப்பற்றிய சங்கதியைப் பிறரிடஞ் சொல்வதும் பேதைமை. நமது முன்னறிஞர்கட்கும் இது உடன்பாடானதல்ல; ஆதலால், இஃதோர்பால் இருக்கட்டும். இப்போது சாவித்திரியின் சரித்திரத்தை சுருக்கமாகச்சொல்லுகிறேன்; யாவரும் ஒருமனப்பட்டு அன்போடு கேட்பீர்களாக!

ஐந்தாவது அத்தியாயம்.

கல்வி கேள்வி, அறிவு, மேன்மை, ஒழுக்கம், ஜீவகாருண்யம், தெய்வபக்தி முதலிய நற்குணம் நிறைந்த இப் பரத கண்டத்தில் மத்திர தேசத் தரசனாகிய அசுவபதி யென்பான், புத்திரப்பேற்றின் நிமித்தம் பதினெட்டு வருடங்களாக ஸரஸ்வதியை நோக்கித் தவஞ்செய்ய தேவியாரின் அனுக்கிரகத்தால் அவன் பட்டத்துத் தேவியாகிய மாலவிதேவிக்கு உத்தமஸ்திரீ களுக்குரிய அங்க இலட்சணங்களெல்லாம் நிரம்பப்பெற்ற ஓர் பெண்மகவுப் பிறந்தது. ஸரஸ்வதிதேவியின் திருவருளால் அது பிறந்தமையால் அப்பிள்ளைக்குச் ஸரஸ்வதியின் பெயர்களிலொன்றாகியசாவித்திரி எனும் நாமத்தை மங்களகரமாகச் சூட்டினார்கள்.

இந்தச் சாவித்திரி யெனும் பெண்கள் நாயகம், நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாய், வளருங் குளிர்ந்த பிறையைப்போலத் தேக வளர்ச்சியும், அழகின் கிளர்ச்சியும், கல்விமுதலிய நற்குண மலர்ச்சியும் நாடோறும் வளர விளங்கிப் பேதைப் பருவங் கடந்து பெதும்பைப் பருவம் அடைந்து, தாதியர் குழாஞ் சூழ; கழல், அம்மானை பந்து முதலியன ஆடியும், ஊசலாடியும், கிளிக்கூட்டம்போல அம்மனையின்கண் விளையாடியும், தாமரை மலரினை யொத்த முகத்தில் சதா ஆனந்தமே நிர்த்தனமிடவும், அந்த மலரில் வண்டுகள் சூழ்ந்திருத்தலை யொத்த கரியகூந்தல் மேகத்தைப் பழித்தல் போலத் துலங்கவும், தாமரைக்கு மழை பெய்ய விட்ட வான வில்லினை யொத்த நெற்றியானது காணும் ஆடவர்களின் உள்ளத்தை வளைத்துக்கொள்ளும் பான்மையாய் இலங்கவும், மன்மதனது கரும்புவில்லையும், பூவில்லையுமொத்த புருவங்கள் : விழியை அம்பாகக் கொண்டு ஆடவர் நெஞ்சங் கிழிபட வளைத்துள்ளதுபோல் அமைந்திருக்கவும், கண்கள் கயலைப்போல் திகழ்ந்து உலவவும், பவளத்தை யொத்த செவ்விய உதடுகளும், அந்தச் செவ்விய அதரமாகிய இந்திரகோபத்தைப் பிடித்தற்குப் பச்சோந்தி தாழ்தலை யொத்தநாசியும், மதனனது வெற்றிக் கொடியை யொத்த காதுகளும், முகமாகிய பதுமநிதியுடன் விளங்கும் சங்கநிதியினை யொத்த கழுத்தும், வாழைத் தண்டினை யொத்த தொடைகளும், பொன்னாற்செய்த பந்தினை யொத்த முழந்தாட்களும், பொற்றூண்களை நிகர்த்த கீழ்க்கால்களும், அப் பொற்றூண்களின் கீழிட்ட பவளபீடத்தினை யொத்த பாதங்களும் உடைய மங்கைப் பருவம் அடைந்து, ஆடவர்களின் மனக்கவலை எவ்வகையதாயினும் தன்னைக் காண்பரேல் அந்தக்ஷணமே அக்கவலைகளை மாற்றும அருமருந்தன்ன பேரழகின் நாயகமாய் வாய்ந்தனள் நமது சாவித்திரி.

இப்படி யிருக்குங் காலத்தில் அசுவபதி தனது அரிய குமாரத்தியாகிய சாவித்திரிக்கு அநேக நாட்களாக வரன் தேடியும் தனக்கு உகந்தவன் அகப்படாமையினால், தனது செல்வக் குமாரத்தியை அருகிலழைத்து, "என் கண்மணியே! நீயோ எனக்கு ஏகபுத்திரி; என்னிஷ்டப்படி உனக்குக் கணவனைத் தேடியும் கிடைக்கவில்லை: ஆதலால், நீ நமது மந்திரிமார்களுடன் சென்று, உன் இஷ்ட நாயகனை நாடிவந்து எனக்குச் சொல்வாயாகில் அவனுக்கு உன்னை நன்மணம் முடித்துக் கொடுப்பேன்" என்றுகூறி, வயதிலும் அறிவிலும் பெரியோர்களாயுள்ள மந்திரிகளோடு சாவித்திரியை அனுப்பி வைத்தனர்.

(இவள் வருவதற்கு முன்னதாகவே திரிகால ஞானி யாகிய நாரத மகாமுனிவர் அங்கெழுந்தருளி அசுவபதியோடு சத் சம்பாஷணை செய்துகொண் டிருந்தார்.) இவள் வந்த தும், இருவரையும் நமஸ்கரித்து நின்றாள். நாரத மகாரிஷி யானவர் சாவித்திரியைப் பார்த்து, 'குழந்தாய்! நீ எங்குச் சென்று வருகின்றனை ?'' என்றதும், சாவித்திரி நாணத்தோடு "சுவாமி! அடியாள் தந்தையின் உத்தரவுப்படி வரனைத் தேடப் பல தேசங்களுக்குச் சென்றும் கிடைக்கப் பெறாமல் கடைசியாகச் சமீபத்திலிருக்கும் வனத்தில் க்ஷத்திரிய வம் சத்தி லுதித்த தியுமத்சேனன் எனும் அரசன் சாளவ தேசத்தை நீதியுடன் பரிபாலனஞ்செய்து வருகையில், பூர்வ வினையால் அவனுக்கு நேத்திரந் தெரியாமல் போயிற்று. அச்சமயம் சத்தியவான் என்ற அவர் குமாரர் சிறு குழந் தையாயிருந்ததினால், வேற்றரசன் தியுமத்சேனனது அரசைக் கைக்கொண்டான். அப்படிக் கைக்கொண்டதின் பிறகு, அரசனும் அரசியும், சிறுகுழந்தையாகிய சத்தியவானுடனே காட்டிற்குச் சென்று தவஞ் செய்து வாழ்கின்றார்கள். அந்தச் சத்தியவானையே என் கணவனாக மனதில் வரித்துக் கொண்டேன் " என்றனள்.

நாரத மகரிஷி :—" சாவித்திரீ ! யாது செய்தனை ? மோ சம் போயினையே ! சத்தியவானை மணம்புரிவாயாகில், நீ சுக மடைய மாட்டாய். அவன் இன்று முதல் ஒரு வருஷத்தில் இறந்துவிடுவான். அவனை விட்டு இன்னொருவனை நாடக்கட வாய்." என்று கூறினார். பதிவிரதத்திற் சிறந்தவளாகிய சாவித்திரி கூறுகின்றாள் :

''கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவாரார்
நுண்ணியரெங் காதலவர்.''

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில."

—திருக்குறள்

அதாவது, " எம்முடைய தலைவர் எமது கண்ணுள்ளே நின்றும் போகார் ; அறியாமல் கண்ணை இமைத்தோ மாயி னும் அதனால் வருந்தவு மாட்டார்."

" காமத்துக்குரிய இருவருள் கண்களோடு ஒருவர் கண் கள் பார்வையால் ஒக்குமாயின், உண்மை தோன்றச் சொல் லுகின்ற வாய்ச்சொற்கள் ஒருபயனும் உடையனவல்ல.

இவற்றினை நீர் அறியீரோ ? எப்போது ஒருவரை என் கண்ணும், மனதும் புணர்ந்ததோ அப்போதே நான் அவரை மணந்ததை யொக்கும். அதைத் தவிர்த்துப் பின்னுமொரு வரை விரும்புவனாயின் அது விபசாரமேயாகும். இவ்வித மாகிய செய்கை இழிஜன மாதர்களின் செய்கையேயன்றி, மனம், வாக்கு, காயமாகிய மூன்றையும் சதா சுத்தமாகவு டைய குலமக்கட்குப் பொருந்தியதல்லவே. குலமக்கள் தம க்கு வாய்த்த கணவர் எவ்வித குறையுடையரே யானாலும், அவர்களைப் போற்றி,

" சாவிற் சாதல், நோவின் நோதல், ஒண் பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வுநனி வேட்டல், பிரிவு நனியிரங்கல்."

என்ற நமது இறைவனார் கற்பனையின்படிப் பேணி யொழுகுவரேயன்றோ ! ஆதலால், எனது மனது நாடிய அவ ரையே மணப்பேன் என்று கூற, இவற்றை யறிந்த தந்தை உடன்பட்டுச் சத்தியவானுடைய தாய் தந்தையரை வரவ ழைத்து அவர்களையும் சம்மதிக்கச் செய்து ஒரு சுப தினத்

தில் சாவித்திரிக்கும், சத்தியவானுக்கும் அதிவிமரிசையாக விவாகம் நடத்தினர். சில நாட்களாயின. சாவித்திரி தன தாருயிர்க் காதலனோடு செல்ல, அலங்கார ஆடையாபரணங்களைத் துறந்து, தவத்திற்குரிய ஆடை தரித்து வனத்திற்குச் சென்றனள். (பதிவிரதா சிரோமணி யானவள் தன் புருஷன் விருப்பத்தின்படியே ! என்றும் நடப்பாள்)

திரிகால ஞானியாகிய நாரத பகவான், முற்கூறியவற்றை நினைந்து நினைந்து சாவித்திரி தவம் புரிவாளாயினள். நாளும ஒவ்வொன்றாய்க்கழிந்தது மிகுதியாயுள்ள நாட்களோ ஒருமூன்றேயாம். அந்த மூன்றுநாளும் அன்ன ஆகாரம், உறக்கமில்லாமல் கொடுந்தவம் புரிந்து கிடந்தாள். மூன்றாம்நாள் காலையில் வழக்கம்போலச் சத்தியவான் தன் கோடரியைக் கைக்கொண்டு காட்டிற்குச் செல்ல, சாவித்திரியும் அவனைப் பின்தொடர, சத்தியவான் அவளைப் பார்த்து, "கண்மணீ! நீயோ உபவாசத்தால் இன்னும் ஆகாரம் உட்கொள்ளாமல் இருக்கின்றனை. காட்டிற்கேகும் மார்க்கமோ முட்கள் நிறைந்துள்ளது; உன்னால் வரச் சாத்தியப்படாது" என்றுசொல்ல, அவள், "எனக்கு யாதொரு வருத்தமு மில்லை: வனத்தைப் பார்க்கப் பிரீதியாய் இருக்கின்றமையால் தங்களோடு யானும் வருகின்றேன்." என்று பின்தொடர்ந்து சென்றனள்.

இருவருமாகக் காட்டிற்குச் செல்லுகையில் வழியிலுள்ள விநோதங்களைப் பார்த்துக்கொண்டே காட்டை வந்தடைந்தார்கள். சத்தியவான அங்குள்ள காய்ந்தமரம் ஒன்றைவெட்டத் தன் கோடரியைச் கைக்கொண்டு வெட்டுகையில், சகிக்கக் கூடாத தலைவலியும மயக்கமும பொறுக்கக் கூடாதவனாய்ச் சாவித்திரியின் மடியின்மீது சாய்ந்து நித்திரை போயினன். அந்நேரம சத்தியவானின் ஆயுள் முடி

யின் நாழிகையா யிருந்தமையால், தேகத்தையும், உயிரையுங் கூறுபடுத்துந் தொழிலால் கூற்றுவன் என்றும், காலகணிதத்தைக் கசடறக் கொள்ளுந் தன்மையால் காலன் என்றும்,

"போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னான் நல்குர வறியான்
தீயா ரென்னான் செல்வரென் றுன்னான்."

—கபிலரகவல்

என்ற தனது தொழிலில் சிறிதும் நடுநிலை தவறாத தன்மையால் தருமன் என்னும் பெயர் பெற்ற யமன் சத்தியவானுக்கருகில் ஒளி மயமான உருவத்தோடு நிற்க, அவ்வுருவத்தைக் கண்ட சாவித்திரி நடு நடுங்கி, மடியின்மீதிருந்த சிரசைக் கீழே வைத்து, அவ்வுருவத்தை நமஸ்கரித்து, "சுவாமி! தாங்கள் செய்ய எத்தனிக்கும் காரியம் யாதோ?" என்று மிகவும் வருத்தத்துடன் வினவினாள்.

யமன் :—"உத்தமியே 'கணவனிற் சிறந்த தெய்வம் வேறொன்றில்லை" என்றபடி நீ உன் புருஷனைத்தெய்வமாகக் கருதி அதற்குத் தக்கபடி நடந்துவந்தாய். அன்றியும், மனத்திலும். வார்த்தையிலும், சரீரத்திலும் பரிசுத்தமுடையவளாய் இருக்கின்றபடியால் நானும் உன்னோடுபேசுகிறேன். நான் யமன். உன் கணவனின் நாட்கள் இன்றோடு முடிந்துவிட்டதினால் அவனுயிரைக் கொண்டு போகிறேன். சாதாரணமாய் மனிதருடைய உயிரைக்கொண்டு போவதற்கு எனது தூதர்களேவருவார்கள்; ஆனால், சத்தியவான் நற்குணசீலனாகவும், தருமத்தைத் தவறாது செய்தவனாகவும் இருக்கிறபடியால், இப்படிப்பட்டவனுடைய உயிரைக் கொண்டு போகத் தூதர்களால் கூடாதாகையால் நானே வந்தேன்"

என்று சொல்லிச் சத்தியவானுடைய சரீரத்தினின்றும் உயிரைப் பிரித்துக்கொண்டு தென்திசை நோக்கிச் செல்ல, அதைக்கண்ட சாவித்திரி, சொல்லமுடியாத துக்கமுடையவளாய், யமனைப் பின்தொடர்ந்தாள். அதைக்கண்ட யமன், “புண்ணியவதி! நீ உன் நாயகனுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்திருக்கிறாய்; திரும்பிச்சென்று உன் கணவனின் உத்தரக் கிரியைகளைச் செய்வாயாக; என்னைத் தொடர்வதால் பயனில்லை. நீ போய்விடுவாயாக!” என்று அநேக விதமாய்ச்சொல்லியும் கேளாமல், தன்னைத் தொடர்வதைக் கண்ட யமன், அவளது கற்பை மெச்சி, “ஓ சத்தியவானின் தருமபத்தினி! உன் பர்த்தாவின் உயிரைத் தவிர வேறெதைக் கேட்டாலும் கொடுப்பேன்; சத்தியவானின் ஆசையை விட்டொழிவாயாக” என்றனன்.

சாவித்திரி:—“தேவரீர்! யான் விரும்பும் வரத்தைத் தாங்கள் அருளுவதாகக் கூறினமையால், இப்போது அடியாள், விரும்புவது என்னவெனின், கண் தெரியாத என் மாமனாருக்குக் கண் தெரியச்செய்ய வேண்டும் என்பதே” என்றாள்.

யமன்:—“அப்படியே உன் மாமனாருக்குக் கண்தெரியும் நீ செல்லுவாயாக.” என்றான்.

சாவித்திரி:—“தேவே! நானெங்குச் செல்வது? பர்த்தாவே எனக்குத் தெய்வம், வீடு, பொருள் மற்றும் எல்லாச் சம்பத்துக்களும் தாங்கள், என் நாதனைக் கொண்டுபோகுமிடத்திற்கு நானும் வருவேன்” என்றாள்.

யமன்:—“சாவித்திரி! உன்னைப்போல் பெண்களை இதுவரையில் யான் கண்டதில்லை. நீயே மகா உத்தமி. சத்திய

வானின் உயிரைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் கொடுக்கிறேன் கேள்!” என்றான்.

சாவித்திரி:—“வேற்றரசன் எனது மாமனாருடைய ராஜ்ஜியத்தைக் கைக்கொண்டான். அதை மீண்டும் அடையும்படி அருளவேண்டும்; எனது தந்தையாகிய அஸ்வபதிக்கு ஆண்மகவு உண்டாகவும் வரந்தரல்வேண்டும்” என்றனள்.

யமன்:—“அப்படியே நீ கேட்ட இரண்டு வரங்களையும் கொடுத்தேன். நீயோ வெகுதூரம் வந்துவிட்டாய். இனி மேற் சிரமப்படாதே. போய்விடுவாயாக.” என்றான்.

சாவித்திரி:—“சுவாமி! நான் என் கணவனின் அருகிலிருப்பதால் அது எனக்குத் தூரமாகுமோ? என மனம் இன்னும் அதிக தூரம் செல்லுகின்றது. மேலும், தாங்கள் நடுவு நிலைமையிலிருந்தே எல்லாஉயிர்களுக்கும் தருமமாய் நியாயந் தீர்த்து வருவதாலன்றோ தாங்கள் தருமராஜர் என்னும் பெயரைப் பூண்டுளீர். ஆதலால், எப்பொழுதும் தர்மசிந்தையுடையவர்களோடு சிநேகஞ் செய்வதால் நன்மையே பயக்கும். ஒருவர்க்கு மற்றொருவரிடத்தில் நம்பிக்கை உண்டாவதற்குச் சிநேகமே காரணம். தன்னிடத்திலுள்ள நம்பிக்கையைக் காட்டிலும் சாதுக்களிடத்தில் அதிக நம்பிக்கை பிறக்கின்றது அதனால்தான் அநேகமாய் ஜனங்கள் சாதுக்களின் நேசத்தை விரும்பி, சாதுக்களிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டுகிறார்கள்.”

யமன்:—“இவ்வித இனிமையான வார்த்தைகளை நான் எப்பொழுதும் பெண்களிடத்தில் கேட்டதில்லை. உன் அன்பன் உயிரைத்தவிர வேறெதை யாகிலும் கொடுப்பேன்; கேட்பாயாக.”

சாவித்திரி :—எனக்கு வீர சற்புத்திரர்கள் உண்டாக வேண்டும்" என்றனள்.

யமன் :—நீ கேட்ட வரத்தையும் கொடுத்தேன். கற்புக்கரசியே! செல்லுவாயாக." என்றனன்.

சாவித்திரி :—"சுவாமி நான் என் பர்த்தாவை மீண்டுமடையாவிடில், என்னிடம் பிள்ளைகள் எவ்விதம் உற்பத்தியாகும்? தாங்கள் கொடுத்த வரமும் பொய்யாகுமே" என்றனள்.

யமன் :—(சற்று யோசித்து,) அவளது கற்பை மெச்சி, "ஓ பதிவிரதா சிரோமணி! நீ உன் பர்த்தாவோடு நீடு வாழ்க!" என வாழ்த்தி மறைந்தனன்.

சாவித்திரி எனும் நங்கையர் நாயகம் ஆனந்தக் கண்ணீர் சொரிய தன் கணவன் சரீரமிருக்கு மிடத்திற்கு ஓடோடியும் வந்து நாயகனைத் தட்டியெழுப்பித் தழுவி முத்தமிட்டு, குறையற்றவளாய்த் தனது காதலனோடு நிகழ்ந்த யாவற்றையுஞ் சொல்லித் தாங்கள் இருக்கும் இடத்தைச் சேர்ந்து, இழந்த ராஜ்ஜியத்தையும் மற்ற எல்லா வரங்களையும் பெற்று, ஓருயிரும் ஈருடலும் பெற்றார் போல நெடுங்காலம் வாழ்ந்திருந்தனர்.

கேட்டீரோ! சாவித்திரியின் கற்பின் மேன்மையை," என்றார் மார்க்கசகாய தேசிகர்.

ஞா. ச. முதலியார் :—"ஐயன்மீர்! என்ன ஆச்சரியம், ஐயா! சாவித்திரி ஓரரசன் புத்திரி; பெருங் கட்டழகி, கலைநாயகி அருளாற் பிறந்த கலைவல்லி. இவ்வித நல்ல இலட்சணங்களெல்லாம் கூடிய உத்தமிக்குத்தானே புருஷனிடைத்தல் அரிதாகும்? அப்படியிருந்தும், தன தெண்ணம் சத்திய

வான்மீது சென்றதால் அல்லவோ அந்தஎண்ணத்தைப் பிறர் மீது செலுத்தல் தகாதென்ற பெரும் விரதமல்லவோ சத்தியவானையவள் மணந்தது என்று சொல்வேனோ! நளாயினியைப் போல் யாவரும் பூர்வவினை வயத்தரென்றீரே; அவ்வாறு முன்னர்த் தவங்கிடந்து சத்தியவானை மணந்தாளென்பேனோ! யமனோடு வாதிட்டதைக் கைம்மை விரதங் கொண்டு களித்த நெறியென்பேனோ! அம்மம்மா! மகா அற்புதம் ஐயா இச் சரித்திரம். தற்காலத்தில் சில துஷ்ட நாரியர்களோ உரிய நாயகன் எக்குறையுமின்றி நன்றாய்ச் சுகஜீவியாய் இருக்கும்போதே, தாம் தங்கள் கண்ணில் எத்தனை பேர், காதில் மனதில் எத்தனை பேரைக் கணவராகப் பாவித்து இச்சையால் மோசம் போகின்றனர். அநேக பாடுபட்டு நல்லாளென மணந்துள்ள தமதுரிய நாயகமாரைப் பலவிதத் தொல்லையில் விடுக்கின்றார்கள். சாவித்திரியின் விரதம் மெச்சத்தக்கதே! இச் சரித்திரம் மகா அற்புதமே. ஆனால், 'சாவித்திரி தன்னிச்சையால் கொழுநனைக் தேடிக்கொண்டாள்' என்றதொன்றே ஒருவாறு சங்கை தருகின்றது. பெண்களெல்லோரும், தந்தை தாய் முதலிய பெரியோர்களின் ஏற்பாட்டினாலேயே திருமணம் பெறுகின்றனரன்றோ?" என்றார்.

மா. ச. தேசிகர் :—"நண்பரே! உமது சங்கற்பம் மிகவும் நயக்கதக்கதே. சாவித்திரி தனது தந்தையின் அநுமதியின்படியே கணவனைத் தேடித் தந்தையின் சமுகத்திலன்றோ மணங்கொண்டது?"

தேசிகர் கூறிய சரித்திரங்களாலும், அதன் சார்பாய் விளக்கிய இதோபதேசங்களாலும் முதலியார் தனது குடும்பத்தோடிருந்து கேட்டு ஆனந்த பரவசராகி, "ஸ்வாமிகாள்! எங்களால் தங்களுக்கு மிகுதியும் சிரமம் நேர்ந்ததன்றோ?"

என்று பேசிக்கொண்டிருக்குங்கால் திருவொற்றியூரிலிருந்து குணபூஷணத்தை மணம் பேச மூன்று சுமங்கிலிய மாதரோடு ஒருவர் வந்தார்.

ஞா. ச. முதலியார் :—அவர்களை நல்வரவேற்று, வந்து வரலாறு கேட்டறிந்து, பிள்ளையின் வயது, உத்தியோகம் முதலியவற்றை விசாரித்துப், பின்னர் வந்தவர்களை நோக்கித் தாங்கள் அடுத்த சுக்கிரவாரம் வருவீராக! இது விஷயமாக யான் எமது பந்துக்களான பெரியவர்களிடம் ஆலோசிக்கவேண்டியது" என்று புகன்று உபசரித்தனுப்பினர்.

மா. ச. தேசிகர் :—முதலியாரை நோக்கி, "யானும் போகவேண்டும்; இன்னும் இரண்டு நாட்சடந்த பின்பு யான் வருவேன். சம்பாஷணையிலிருந்த விவாக விஷயம் இப்போது செய்கையிலேயாக நேர்ந்தது மிகுதியும் புகழத் தக்கது" என்று ஆசீர்வசனமொழி கூறி விடைபெற்றேகினர்.

பின்பு முதலியார் தனது பத்தினியைப் பார்த்து, "நாயகமே! இப்போது பெண் கொள்ளவந்தவர்களைப் பற்றி என் மனதில் களங்கஞ் சிறிதும் காணப்படவில்லை. குலமுதலியனவும ஒத்ததாகவே யிருக்கிறது. இவையெல்லாம் தேசிகரின் தெரிசன மகத்துவமென்றே கூறுவேன்.

"அறக்கு றவை நிறைவாக்குஞ் சம்பத் தாக்கும்
ஆபத்தை யுறவாக்கும் அசபந் தன்னை
சிறக்குமுயர்ந் தவர்கூட்ட மென்னுங் கங்கை
சீதநீ ராடினர்க்குச் செந்தீ வேள்வி
மிறக்கரிய தவந்தானந் தீர்த்தம் வேண்டா
மிடர்பந்த மறுத்தெவர்க்கு மினியோ ராகிப்
பிறப்பெனும்வே லைப்புணையா முணர்வு சான்ற
பெரியோரை யெவ்வகையும் பேணல் வேண்டும்."

என்ற ஞானவாசிட்டச் செய்யுளின் கருத்தை ஈண்டே காணத்தக்கதன்றோ! ஆயினும், நாயகி உனது கருத்தெப்படி?" என்றார்.

ம. நாயகம் :—"அடியாளையும், என் குழந்தையையும் ஆதரிக்கக்கடவீர்! உமக்குச் சம்மதமான காரியத்தில் அடியாளுக்குஞ் சம்மதமே; தாங்கள் அடியாளையுங் கேட்பதென்னே! நமது தேசிகரும் வரட்டும், அவரோடும் ஆலோசிப்போம்," என்றாள்.

குணபூஷணம், தேசிகர் கூறியவற்றையெல்லாஞ் சிந்தித்துத் தனக்கு வாய்க்கப்படுவோன் 'எப்படியோ' என ஒருகால் வருந்துவாள்; மற்றொருகால் 'நமது தேசிகரால் அவ்விதக் குறைவு உண்டாகாது' எனத் திடங் கொள்ளுவாள். பின்னும், 'பூர்வ வினைப்படி கணவன் வாய்க்கப்பெறுவான்' என்றும் பெரியவர் சொல்லியிருப்பதால் நாம் இவற்றையெல்லாம் நினைப்பதில் பயனொன்றுமில்லை. எல்லாவற்றிற்கும் 'பகவானே துணை' என்று விரதங் காப்பாள்.

இவ்வாறு இவர்கள் பற்பல விதமாய்ச் சிந்தித்தும்' உறவின்முறையார், உரிய நண்பினர் முதலியவர்களோடு ஆலோசித்தும், எல்லோர்கட்கும். இது சம்மதமாகவே யிருக்கக்கண்டு, தேசிகர் திருக்கருத்தைத் தெரிதலொன்றே என எதிர்பார்த்திருந்தனர். இரண்டு நாள் செல்லவே தேசிகர் தாம் சொல்லியவண்ணம் வந்து சேர்ந்து, "திருமண நிமித்தம் வந்தவர்களுக்கு என்ன சொல்லியனுப்பினீர்? அக்காரியத்தில் தங்களுடைய அபிப்பிராயம் எப்படி?" என்று விசாரித்தார்.

ஞா. ச. முதலியார் :—"சுவாமி! இது பரியந்தம் அடியேனுக்கும் மற்றோர்களுக்கும் இது விஷயத்தில் சர்வ சம்ம

தமேயாயினும், தங்களின், உத்தரவுக்கே எதிர்பார்த்திருக்கிறோம்" என்றார்.

மா. ச. தேசிகர்:—"முதலியாரே! பிள்ளைகளின் நன்மை தீமைக்குக் காரணமாகின்றவர் பெற்றோர்களே என்று முன்னரே சொல்லியிருக்கின்றேன். ஆயினும், ஒன்று சொல்லுகிறேன். பிள்ளையின் வகையாரைப் பற்றி விசாரித்திருப்பீரென நம்புகின்றேன். பிள்ளையின் வயதென்ன? நீர் விசாரித்தீரா?" என்றார.

ஞா. ச. முதலியார்:—"இருபத்தைந்து வயதெனக் கேள்வி."

மா. ச. தேசிகர்:—"சரி, நமது நங்கைக்கு வயதென்ன?"

ஞா. ச. முதலியார்:—"பதின்மூன்று"

மா. ச. தேசிகர்:—"எல்லாப் பொருத்தங்களும் உடனிகழ்வதா யிருக்கின்றன. எப்படி யென்றால், இது ஸ்மிருதி கர்த்தாக்களின் கட்டளைப்படியே யமைந்ததா யிருக்கின்றது. முப்பது வயதுள்ளவன் பன்னிரண்டு வயதுடையவளை மணம் புரியலாம்" என்றனர். "பெண்ணின் அளவை நோக்கினும் அமைந்தது சிறப்பே.

இரண்டாவது, பிள்ளையின் உத்தியோக மென்னவோ?"

ஞா. ச. முதலியார்:—வேளாண்மை; ஆறு காணிக்கு உரிமையுள்ளவனும்.

"உழுதுண்டு வாழ்வரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்."

வேளாண்மை சிலாக்கிக்கத் தக்கதே. ஆயினும், முதலியாரே! உலகில் பெரும்பாலார் தாங்கள் இவ்வண்ணம் மணம் பேசப் புகுங்காலையில் பெண்சார்பினரிடம் மிகைப்படப் பொய் பேசுவது முண்டு. ஒருகாணி யுடையவனு யிருப்பனேயாயின பெண் நிமித்தம் "நூறு காணி நிலமுண்டு" என்பார்கள்.

பிள்ளைக்கு வயது நாற்பது இருந்தால் பெண்ணினிமித்தமாக, "பிள்ளையாண்டான் பூரிப்பில் வளர்ந்தவன்; அவனுக்கென்னவயது இருபதுங்கோ" என்பார்சள். ஆகையால், வயது, சம்ரக்ஷிக்குந் தன்மை ஆகிய இவ்விரண்டையுமே நீர் அதி முக்கியமாகத் தேறவேண்டியது. பிள்ளையை நீர் நேரில் பார்த்தல் எல்லாவற்றினுஞ் சிறந்தது. யான் முன் சொன்ன கதைகளெல்லாம் உபது நினைவி லிருக்கலாம். பிள்ளை அங்கவீன முதலிய இல்லாதவனாகவும், பின்னும மற்ற நோய்களற்றவனாகவும, சாந்தமான பார்வை யுடையவனாகவும் இருத்தல்வேண்டும். இன்னும் குணம் முதலியவற்றை அக்கம்பக்கங்களில் விசாரித்து அறியுங்கள்." என்றார்.

ஞா. ச. முதலியார்:—"சுவாமிகாள்! அப்படியே யான் நேற்று பிள்ளையிருக்கும் கிராமத்திற்குச் சென்றதில், உறவினர் என்றும், பிறகு அவன் இன்னானெனவும் எனக்கு நன்றாகத் தெரிந்தது. அவனைச் சிறு பிராயத்திலிருந்தே யான் அறிவேன். ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், தவம், தானம், வணக்கம் முதலிய நற்குணங்களெல்லாம் நன்கமையப் பெற்றவனே. தமிழ்ப் பாஷையிலும் நல்ல தேர்ச்சியுடையவன். 'அவனுக்கு எப்போதும் பெரியோர் நேசமே' என அங்கிருப்பவர் சொல்லத் தற்போதிய ஒழுக்கமும் இதமானதும் பெரியோர் கொண்டாடத் தக்கதெனவும் அறிந்தேன்." என்றார்.

தேசிகர்:—"கல்வியழகே யழகு" "குணத்தழகேயழகு" இவைகளேபேரழகு; இவைகளே நல்லோர்களால்நாடப்படுவன.

"கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகு செய்வார்."

—நீதிநெறிவிளக்கம்.

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு."

—நாலடியார்.

இப்படியிருக்க யாம் பார்க்கவேண்டிய தொன்று மில்லை. ஆனால், பஞ்சாங்கப் பொருத்தம் ஒன்று மட்டும் நாம் பார்க்க வேண்டியதா யிருக்கின்றது. "இதோ பார்த்துவிடலாம்" என எழுந்து, "இராசிப்பொருத்தம், கணப்பொருத்தாதிகள் சகலமும் சம்மதந் தருகின்றன. நாளை அவர்கள் வருவாராயின் விவாக நிச்சயார்த்த நாளைப்பற்றித்தான் நாம் பேச வேண்டிய தெனலாம்" என்றார். (அங்ஙனமே அவர்கள் அடுத்தவாரம் திருமயிலைக்கு வந்து பெண்வீட்டாரின் கருத்துக்களை யறிந்துகொண்டு, அடுத்தமாதத்தில் நிச்சயார்த்தமும், அதற்கடுத்த மாதத்தில் முகூர்த்த நாளையுங் குறித்துக் கொண்டனர்.)

பின்னர் முதலியாரும் தனது இல்லாளும், "குணபூஷணம் விவாகமானவுடன் நம்மை விட்டு நீங்கிவிடுவளன்றோ? பெண்களைப்பெறுவோ ரெல்லாம் இவ்விதம் செய்பவர்களே யன்றோ?" எனச் சோர்வதைக் கண்டு, தேசிகர், "ஐயா! முதலியாரே! என்ன! அம்மையாரோடு நீருங் கலந்துகொண்டீரே? அம்மையார் உமக்கு வாழ்க்கைப்பட்டுத் தனது சுற்

றத்தா ரெல்லோரையும் மறந்து, உம்மையே தாயாகவும்-தந்தையாகவும்-கடவுளாகவும் பாவித்திருத்தலை மறந்துவிட்டு இப்போது தன் குமாரத்தி தங்களைப் பிரிந்துவிடுகிறது என்று தனது பேதைமையைப் பாராட்டுகிறார்கள்; நீருங் கலந்துகொண்ட தென்னவிந்தை! ஆகையால், மாதரார் எப்போதும் கணவன்கீழ் இருக்கப்பட்டவரே யாகின்றார்கள். பின்னும் குமாரி என்ற சொல்லுக்குப் பதிவரா என்பது பொருளாம். பதிவரா என்பதற்குப் 'புருஷனைத் தேடுகின்றவள்' என்று பொருள்படுமென்பார். ஆகையால், குமாரிக்குப் பிரீதியான உறவு புருஷனே.

"ஒருவன் ஒரு ருதுவான கன்னிகையை மணங்கொள்ளக் கேட்டும் அவள் தந்தை அதற்குச் சம்மதியாமல் தன்வீட்டில் வைத்திருப்பானாயின், அக்கன்னிகையின் ஒவ்வொரு ருது காலத்திலும் ஒவ்வொரு கருவை யழித்த தோஷம் பிதாவுக்குச் சம்பவிக்கும்" என்று மநு; யாக்ஞவல்கியர் தமது ஸ்மிருதிகளில் கூறியிருக்கின்றார்கள். "நல்ல புருஷனை நாடிக் கொடுக்காமல் ஒரு ருதுவான பெண்ணைத் தன்வீட்டில் ஒரு வருஷத்திற்குமேல் விவாகஞ் செய்விக்காமல் வைத்திருக்கக் கூடாது" என்றுங் கூறுவர். பின்னும், சுப்புரு என்பவள் தன்னை யெத்தனையோ பேர்கள் விவாகஞ் செய்ய வருந்திக் கேட்டும் அவர்களைப் புறக்கணித்துத் தீவிர தபசுசெய்து அதனால் சரீரம் துர்ப்பலமாகி எலும்புந் தோலுமானாள்: மரணாந்த காலமும் நேரும்போலிருந்தது; அப்போது நாரதர் அவளுக்குத் தரிசனமாகி, "நீ நிரம்ப தபசு செய்திருக்கின்றாய்; ஆனால், நீ சொர்க்கத்தில் இடம்தேடிக் கொள்ளவில்லை. தர்மிஷ்டர்கள் வசிக்கும் சொர்க்கலோகத்தில் விவாகமில்லாத ஸ்திரீகள் பிரவேசிக்க இடமேது?" என்று கூறி மறைந்தனர். உடனே பிராச்சிருங்கவத் என்னும் ரிஷியினிடம் ஒரே இராத்

திரி வாழ்ந்திருப்பதாக நிபந்தனைகொண்டு பாணிக்கிரகணஞ் செய்து அன்றிரவிருந்து மறுபகலில் சுவர்க்கம் புகுந்தாள்" என்றுஞ் சாஸ்திரங் கூறுகின்றது. ஆகையினாலே, முதலியாரே! உமது மகள் ரஜஸ்வலை எனும் நல்ல பருவத்தினள். மணங்கேட்க வந்துள்ளாரும் சர்வ பொருத்த லட்சணமுடையவர்கள்; உமக்குஞ் சம்மத மானவர்களா யிருக்கிறார்கள் அங்ஙனமிருக்க, நீங்கள் வருந்துவது என்னையோ? இதுதான் மாயை. இதனை யகற்றி உமது பெண்ணுக்கு மாமி வீட்டில் வாழும் வகையைக் கற்பித்தால் அது உசிதமாகும் என்றார்.

ஏ. ச. முதலியார்:—"உலக இயல்பு நன்றாய்த் தேர்ந்த உத்தமரே! தாங்களே என் புத்திரிக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

ஆறாவது அத்தியாயம்

மா. ச. தேசிகர்:—குணபூஷணத்தை நோக்கி, "குழந்தாய்! நளாயினி, ரோகியாகிய கணவனை வெறுத்தாளா? சாவித்திரி இறந்துபோன கணவனை விட்டிருந்தாளா? மேலும் கற்புடைய மங்கையர் அநேகர் தம் வாழ்க்கையில் எவ்வளவு துன்பம் நேரிட்டும் தமது கணவரை யிகழ்ந்தாரல்லர். ஆதலால், கணவராவார்: அழகற்றவ ராயினும் நோயுற்றவராயினும், வயோதிகராயினும், பண்புடைய மாதர்கள் குறை கூறார்கள்.

"பண்பென்பது பாடறிந் தொழுகல்"

எனப்படும். பாடு என்பது; இடம், ஓசை, குணம், கேடு, பெருமை முதலிய பொருள்படும். ஆதலால், மங்கையர் தமது கணவனின் வீட்டைத் தம்முடைய வீடெனவும், கணவன் கூறும் வாக்கியங்கள் தமக்கு நன்மை பயக்கும் மந்திரங்கள் எனவும் போற்றும் நற்குணமுடையாராகவும், கணவனின் குணம் இத்தகையதென்று தேர்ந்து அவனுக்கிசைந்த ஒழுக்கத்தையே தாமும் கடைபிடிப்பவராகவும், கணவர்க்குக் கெடுதிநேரிட்டால் அக்கேடு தம்மதாகப்பாவித்து அவனோடு வாழ்தல் உடையாராகவும், கணவனையே தெய்வமாகப் பாவிக்கும் பெருந்தகை யுடையராகவும் நடத்தலே பாடு, பண்பு எனப்படும். ஆகையினாலே திருவள்ளுவரும்,

"உறுப்பொத்தன் மக்க ளொப்பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு."

"அவயவத்தால் ஒப்பாத வொப்பல்ல; குணத்தால் ஒப்பாதலே யொப்பாம்." என்றும் கூறியருளினார்.

"குணபூஷணி! நீ நளாயினி சரிதையையும் கேட்டாயன்றோ! எல்லாம் பூர்வ வினைப்படி வாய்ப்பதென்று தெரிந்திருப்பாயென நம்புகிறேன். நீ துன்புறும்படியாக, கல்வி, கேள்வி, அறிவு வாய்ந்த உன் தந்தை தகாதவிடத்தில் உன்னைத் தள்ளமாட்டார். இப்போது உனக்கு வாய்த்திருக்கும் கணவனோ மிகுதியும் நல்லவன். மனதில் சந்தேக எண்ணங்களுக்குமட்டும் இடந் தராதே. எப்போது ஓரெண்ணம் உண்டாகின்றதோ அவ் வெண்ணத்தின்படியே காரியமும் நிகழக்காண்கிறோம். சுத்த இருதயம் உடையவர்களுக்கு எல்லாம் சுத்தமாகவே வாய்க்கும்.

"புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்."

என்றது, "உடம்பு நீராற் சுத்தமாகும்; உள்ளம் சத்தியத்தால் சுத்தமாகும்." உடம்பு சுத்தத்தால் நோயணுகாமல் ஜீவிப்பதுபோலப், பெரியோர் கூறும் சத்திய பரிபாலனத்தால், மனம் சந்தேக விபரீதங்க ளற்றுத் தூய்மை யடையும்; மனம் நல்லதாயின், முகத்தில் அழகு மிகும். மனம் நல்லதாயின், வாக்கு சுத்தமாகும். மனம் நல்லதாயின், மாங்கல்யமும் நல்லதாகும். குணபூஷணி! உன் விவாக சம்பந்தமாக நீயொன்றும் எண்ண அதிகாரியல்ல. உனது இஷ்டப்படியே ஓரழகிய கணவன் வாய்த்தானென்ன வைத்துக்கொள்வாய். அந்த அழகல்லவோ உன்னை மயக்கி அவனுக்குப் பாரியாள் ஆகச்செய்தது? அந்த அழகை, உன்னைப்போல பின்னும் எத்தனை மாதர் விரும்பி அவனைக் கணவனாகக் கொள்ளுவார்கள்? இதனை நீ அறியாய். அந்த அழகுதானும் எவ்வளவு காலம் நிலைத்திருக்கும்? முப்பது வயது மட்டுமே அழகுநிற்பதாகும் அழகைக் கவனிப்பாயாகில் முப்பது வயதானபின் வேறொரு

அழகினைத்தானே பார்க்கவேண்டியதாகும். ஈதெல்லாம் அற்பமதி. நற்குணமோ எனில், அப்படியல்ல; நாளேற நாளேற குணமும் நல்லதாகவே வளரும். அந்த நற்குணமானது அவனில் நிலைத்து வளர்தற்குக் காரணமாவாள் இல்லாள். 'பாரியாள்' என்பதற்கு, '(பாதியாள்) புருஷனின் பாதியுடலா யிருப்பவள்' என்றும் அர்த்தங் கூறுவர். உடம்பிலே பிறந்து உடம்பையே கொல்லும் பிணியைப்போ லாகாமல், கற்புடையவளா யிருப்பவளாலேயே நற்குணம் விருத்தியாகும.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

"இல்லறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கையுடையவளாகித் தன்னைக்கொண்ட கணவன் வரவுக்குத் தக்க செலவு செய்பவள் இல்வாழ்க்கைக்குத் துணையாவள்," என்றார் திருவள்ளுவர்.

"வழிபா டுடையளாய் வாழ்க்கை நடாஅய்
முனியாது சொல்லிற்று செய்தாங்—கெதிருரையா
தேத்திப் பணியுமே யில்லாளே யாண்மகன்
போற்றிப் புனையும் பரிந்து."

கணவனுக்குக் கீழ்படிதலுள்ளவளாய் அவனது வார்த்தைக்கு எதிர்மொழிகூறாதவளாய் இருப்பவளே 'வாழ்க்கைத் துணை' என்றார் முனைப்பாடியார்.

ஆகையால், குணபூஷணி! நீ உன் கணவனைத் தெய்வமாகப் பாவித்து அவனுக்குக் கீழ்ப்படிதலுள்ளவளாயிருப்பாயாக!

"கிளைஞர்க் குதவாதான் செல்வமும், பைங்கூழ்
விளைவின்கண் போற்றா வுழவும்,—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்."

"தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை."

—திரிகடுகம்

"பசிய கதிர்கள் அமுதூறி யறுக்கும் பக்குவம் அடைந்திருக்குந் தருவாயில் அவற்றைக் காவாது விட்ட உழவும், மதுபானஞ் செய்து திரியும் ஒருவன் குடித்தனமும், குறைவற்றதெனத் தோற்றல் காட்டிச் சடுதியில் கெடுதியை விளைவிக்கும் என்பது போலத் தம்மை அடுத்தவர்களுக்கு உதவாமல் தன் பொருட்டாய்க் கொண்டுள்ளார் செல்வமும் கெடுதியடையும்" என்றும் ஈண்டுக்கொள்ளக் கிடைத்தலால் குணபூஷணீ! நீ உன் கணவனோடு வாழுநாளில், உனது கணவனைப் பெருந்தவங்கிடந்து பெற்ற மாமியையும், அரும்பாடெல்லாம் பட்டு வளர்த்துப் புருஷார்த்தனாகச் செய்த மாமனாரையும், அவர்களது சுற்றத்தையும் மனங்கோணாமல் நடத்துவாயாக!

நமது நாட்டிலே மாமிமாரை மெச்சின மருமகளுமில்லை; மருமகளை மெச்சின மாமியு மில்லை. மாமி கொடியவளென்றே உனக்குப் புலமாகும்; ஆனால், அவர்கள் உன்னிலும் வயதில் முதிர்ந்தவர்களாதலினாலும், தானும்ஒருமாமியின் கீழ்இருந்து வாழ்ந்தவர்களாதலினாலும், அவர்கள் செய்கை கொடியதாகாது. உன்னுடைய நன்மையைக் கருதியே அவர்கள் உன்னைக் கண்டித்து நடத்துவார்கள். மாமனார் மாமியார் இவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலே உனது இல்லறஞ் செவ்வையாய் நிறைவேறுதற்குப் பெருந் துணையதாகும். இதனால் உன் கணவனுக்கு உன்மேல் மிகுந்த ஆசையும், பெரியோர் புகழ்ச்சியும், உன் தாய்தந்தையர்க்கு நல்லபேரும் உண்டாகும்.

"இன்னும் தன்னைத்தானே உயர்வாகக்கருதி அகங்கரித்தலும், அடக்க மில்லாமல் பயனற்ற கோபத்தைப் பெருக்கிக் கொள்ளலும், எதிர்படுப் பொருள்கள் எல்லாவற்றின்மீதும் ஆசை கொள்ளலும் ஆகிய இம்மூன்றும் முற்கூறியவாறு செல்வத்தை யழித்தற்குக் கருவி போல்வனவாம்."

குணபூஷணீ! நீ இவற்றையெல்லாம் மனத்திற் கொள்வாயாக! நீயோ சிறுமி; உலக விவகாரமொன்றுந் தெரியாதவள். உலகவின்பமோ சிற்றின்பமெனப்படும். உலகிற்றுன்பம் அதிகம் இன்பஞ்சிறிது. உலகில் எதுவும் நிலையில்லை. உலகமோ தோன்றி மறையுந் தன்மையது.

"நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.."

—நீதிநெறிவிளக்கம்

நீரில் குமிழி யெவ்விதம் தோன்றி மறைகின்றதோ அது போன்றது நமது இளமை. குணபூஷணீ! வருமாண்டில் நீயொரு புதல்வனுக்குத் தாயாகிவிடுவாய்; உன் இளமை நிலையல்ல; நீரில் உண்டாகும் அலைகளைப்போலச் செல்வம்; அங்குமிங்குமாய்த் தோன்றித் தோன்றி மறையும் நமது செல்வமும் நிலையல்லவே. நீரில் எழுதின எழுத்தைப் போலும் பிறந்தவன்றே தொடங்கிற்று நமது தேக இறப்பின் காலம். ஆகையினாற்றான், பிறப்பு, இறப்பு என்ற இரு சொற்களையும் ஒப்பாகவைத்தனர் மேலோர். பிறப்பு என்பதிலுள்ள முதலெழுத்து மெய்யெழுத்து, உயிரெழுத்து எனும் இரண்டாக நின்று, உடலும் உயிருங் கலந்த தேகத்திற்கு அறிகுறியாக உள்ளது. இறப்பு என்பதிலுள்ள முதலெழுத்து உயிரெழுத்து; அது தேகத்தினின்றும் பிரிந்து நிற்கும் உயிரைக்

குறிப்பதாகும்.'' ஆதலால், என்றுமுள்ள ஆத்துமா சுகப்பட, பெருமானை வணங்குவதே பேரின்பம். அவ்வாறு வணங்குவோர்: ஒழுக்கங்களில் சிறக்கவேண்டும். அவற்றையே நான் இப்போது போதிக்கிறேன். அம்மணீ! குண பூஷணம்! மானிட வாழ்க்கை எப்போதும் ஒருபடித்தாகவே யிராது. இன்பமும் துன்பமுங் கலந்தேவரும். மனஞ்சலிக்கக்கூடாது. செல்வத்தைத் தேடுவதும் துன்பம், செலவிடுவதும் துன்பமே யாகும். ஆனால், தரித்திரமோவெனின்,

“ தரித்திர ழிக்க வனப்பினை யொடுக்கிச்
 சரீரத்தை யுலர்தர வாட்டும்
தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்பும்
 சாற்றரு முலோபத்தை மிகுக்கும்
தரித்திரந் தலைவன் தலைவியர்க் கிடையே
 தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திர மவமா னம்பொய்பே ராசை
 தருமிதிற் கொடியதொன் றிலையே ''

—குசேலோபாக்கியானம்

அதுவும் துன்பம். அதனைச் சொல்லவும் வேண்டுமோ? இப்படியாக ஒருவர் தனது இல்வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்டநஷ்டங்களை அடைய வேண்டியதா யிருக்கிறது.

சுதாமா என்னும் பெயரிய பெருந்தவ முனிவர் ஒருவர் இருந்தார். இவர் கிழிந்த துணிகள் பற்பலவற்றை இயைத்துத் தைத்துப் பொத்திய உடையுடையாரானதால் அவரைக் ‘குசேலர்’ என்றழைப்பார். இவர் தாமியற்றும் தவத்தினுக்கு உதவிசெய்ய ‘ஸுசீத்ஸுஷாமா’ என்னும் ஓர் அணங்கை வதுவை செய்துகொண்டனர். அந்த அம்மணியோ!

“ மாசிலாக் குலத்து வந்தாள்,
 வருவிருந் துவப்ப வூட்டும்
நேசமிக் குடையாள், கொண்டோன்
 நினைப்பறிந் தொழுகு நீராள்,
தேசுறு வாய்மை யுள்ளாள்,
 சினத்திட லென்றுமில்லாள்,
பேசுதின் கற்பு வாய்ந்தாள்,
 பெற்றதே கொண்டு வப்பாள்.''

இத்தகைய நற்குண நாயகம். இவ்வம்மை வயிற்றிலே ‘இருபத்தேழு’ பிள்ளைகள் பிறந்தன இயல்பிலேயே வினையினால் இவர்களுக்கு வறுமை மேலிட்டிருந்தது. ஆயினும், ‘ஏற்ப திகழ்ச்சி’ என்று ஐயமெடுக்காமலும், “கடனுண்டு வாழாமை காண்டல் இனிதே’ என்று கடன் வாங்கிப் புண்ணைஞ்சங் கொள்ளாமலும், குசேல முனிவர் என்றுமிருந்தபடியே புல்லரிசியைக் கொணர்ந்து மனைவி கையில் நீட்டுவார். அந்த அம்மாளும் அதனை வாங்கிப் பாகஞ் செய்து அதிதிக்கோர்பாகம் வைத்து, மைந்தர்க்கும் மணாளனுக்கும் பரிமாறி, அவர்கட்கிட்டு மிகுந்ததை உண்டு, அது பற்றாமை கண்டு, உடல் மெலிந்து உழல்வாள். அம்மை ஒரு மகவினுக்கு உணவளிக்கும்போது ஒரு மகவு கைநீட்டும்; முந்தி மேல் விழுந்து இரு மகவும் கைநீட்டும், மும்மகவும் கைநீட்டும். என்செய்வாள் பாவம்! ஒன்று விறியழும்; ஒன்று நிலத்தில் வீழ்ந்து புரண்டழும்; மற்றொன்று கண்பிசைந் தழும்; இவற்றையெல்லாம் பாவம் எங்ஙனஞ் சகிப்பாள்! அம்மனையிற் புகும் ஊர் எறும்புக்குத்தானும் கொடுத்தற்கு உணவு கிடையாது. பிள்ளைகளுக்கும் உடை கிடையாது. பிள்ளைகளுக்குப் பசியுந் தீர்ந்தபாடில்லை; இவற்றை யெல்லாங் கண்ட முனிவரும் மனங் கலங்கவில்லை; இவர் ஒழுக்கினைக் கண்ட மனைவியும்

இவர்மாட்டு வெறுப்புறுத லில்லை இங்ஙனமாக, துயரக் கடலுட் பட்டுக் கரைகாணு தழுங்குவாள்; சினந்த மொழி கள் சிறிதுங் கூறாள்; மறந்தும் மைந்தர்பால் மனஞ்சலியாள்; ஆனால், 'இத் துயர்க்கடலை எப்படி நீந்துவோம்' என்னும் எண்ணமட்டும் தனதுள்ளத்தில் என்றும் குடிகொண் டிருந்தது.

இவ்விதம் பலநாள் கழிந்தபின்னர், ஒரு நாள் சமய மறிந்து, மனந் துணிந்து, கணவன் முகநோக்கி, "அந்தோ! நமது குழந்தைகள் பெரும் பசி யொழிக்க அன்ன மில்லாமல் வருந்துகின்றனர். நம் பிள்ளைகளைச் சிறப்புறக் காப்பாற்றல் தேவரீர்க்குக் கடனுமன்றே! அரசர்க்கரச னுகிய ஸ்ரீ மாதவனை உம்மோடு ஒருங்கு கற்ற ஒரு சாலை மாணவன் என்று உலகினர் சொல்லுவார்கள். அவர் உம் மைக் கண்டமாத்திரத்தில் வேண்டிய வெல்லாம் அருளுவார். கண்ணபிரானைக் கண்டு வருவிர்" என்றாள். இது கேட்ட முனிவர் "நங்காய்! கல்லினுட் சிறு தேரைக்கும், கருப்பை யண்டத் துயிர்க்கும் உணவளித்துக் காக்கும் ஈசன் உன் புதல்வரைமாத்திரம் மறப்பனே? மறவான்; இஃது உண்மை. நீ கொண்ட துன்பத்தை விட்டுவிடு! பிரமன் விதித்த ஆயு ளின் அளவுப்படி அவரவர் வினைக்குத் தக்க விருப்புணவும், வெறுப்புணவும் உண்டென்பார் கற்றோர். ஆதலின், உன் மைந்தருக்கு ஆயுளுள்ளவரையில் இருவினைக் கேற்ப உணவு உண்டு. நீ வருத்தப்படவேண்டாம். எது வந்தாலும் 'வினை' என நினைந்திருத்தல் வேண்டும். உலகியல் நன்குணராய்! உன்னைப் பொருட்டேப் பீடித்ததோ" என்பார். இவ்வா ருகப் பல நீதிகளைப் போதித்து மனைவியின் மனக்கவலையை மாற்றுவார்.

அம்மையாரோ சிறிதும் வெறுப்படையாது, கொழுநனை நோக்கி, "குலமகட்குக்கொழுநனே தெய்வமென்பர்; ஆகவே எம்மைக் காப்பாற்றல் உம்மைப் பொறுத்த கடனுயிற்று. "புதல்வர்க்குத் தெய்வம் தந்தையும் தாயும்" என்பாராத லின், அரிய மக்களை ஆதரிப்பது நம் மிருவருக்குங் கடனு யிற்று," எனப் பலவா றிரப்ப, குசேலர் துணிந்து, துவார்கா புரியை யடைந்து, கண்ணபிரானைக் கண்டு, அவனருளால் நற் சேம மடைந்து வாழ்ந்திருந்து பின்பு பரமபதம் பெற்றனர் என்பது சரித்திரம்.

குணபூஷணி! இந்த முனிவர் சரித்திரத்தைக் கவனித் தாயா? உனக்கு என்றுஞ் சிறுமையும் வறுமையும் ஏற்படாது ஒருக்கால் வினைப்பயனுல் வறுமை வந்துற்றாலும் அதுவும் நன்மைக்கே என்று எண்ணி வறுமை வந்தடைந்த காலத்து அம்முனிவர் பத்தினி க்ஷுத்க்ஷாமா என்பவள் எவ்வாறு கஷ் டத்தை யனுபவித்துக் கடவுள் கடாட்சத்தால் நல்வாழ்வு பெற்றாளோ அதுபோல, கணவனிடம் மனங்கோணுமல் இருந்து கற்பரசி எனக் கூறுங் கணவனைப் பேணுவையேல் கடவுள் உனக்கு அருள்செய்வார்.

"பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வு மூடலும் ஊட லுணர்த்தலும்
பிரிவும் பிறவும் மருவிய தாகும்."—அகப்பொருள் விளக்கம்

வார்த்தையால் சொல்லற்காகாமல் உள்ளத்தின்கண்ணே யே சுவைக்கும் ஓரின்பவன்பே அகப்பொருளென்பர். அத்த கைய அன்பினுலே தனது கணவனோடு மகிழ்ந்திருத்தலும், அன்பில் பிணக்கமும், அதனைத் தோழியரிடங்கூறலும், கண வன்பிரிவினுற்றுூவருந்தலுமாகிய இவையேகற்புஎனப்படும்.

குணபூஷணி! இன்னும் கற்புக்கரசி 'வாசுகி' யின் ஒழுக் கத்தைச் சிறிது கூறுகிறேன். இதனை நன்முகக் கேட்பாயாக.

———

ஏழாவது அத்தியாயம்.

நீர்வளம் நிலவளஞ் சிறந்து மேன்மைச் சான்றோரையுடைய தொண்ட மண்டலத்திலே பயிர்களுக்கும் நல்லோர்களுக்கும் நேர்ந்த சங்கடந் தீரத் திருவள்ளுவநாயனார் விபூதி பஞ்சாட்சர முதவி இரட்சித்த படியினால் அந்நாளில் காவிரிப்பாக்கமென்னும் ஓர் ஊரில் ஆயிரம் ஏர்கொண்டு உழுது பயிர் செய்துவந்த மார்க்கசகாயன் என்னும் ஒரு வேளாளன், திருவள்ளுவருக்கு ஓர் ஊரும் அளவற்ற திரவியமும், அல்லாமலும், நாயனாரின் அரிய செயலை வியந்து தனது புத்திரி வாசுகியையும் தர நிச்சயித்து, நாயனாரிடத்து வந்து, "என் பெண்ணைத் தேவரீருக்கு விவாகம்செய்து கொடுக்க நினைத்திருக்கிறேன்; அப்படியே அங்கீகரிக்க வேண்டும்" என்று சொன்னான். நாயனார் உலகினருக்கு இல்லற நடாத்திக் காட்டவேண்டுங் காரணத்தை யோசித்து, "அந்தப் பெண் நான் கொடுக்கும் மணலை அன்னமாக்கி எனக்கு இடுவாளானால் நான் விவாகஞ் செய்துகொள்வேன்" என்றார். அந்தப் பெண் அப்படியே சம்மதித்துச் சமைத்துப் படைத்தனள். நாயனாரும் அங்கீகரித்து, விதிப்படி வாசுகியை விவாகஞ்செய்து, சில நாள் அங்கிருந்து, பின்பு மனைவியுடன் திருமயிலையில் தங்கி நெய்தற் றொழிலால் சீவனம் செய்திருந்தனர்.

இப்படி இருக்கையில், ஒரு பெரியவர் அவர் வீட்டின்கண் சென்று, "சுவாமி! இல்லறம் பெரிதோ? துறவறம் பெரிதோ? அடியேனுக்கு அதனை அனுக்கிரகித்தல் வேண்டும்" என்று பல நாள் பணிசெய்து காத்திருக்க, நாயனார் அவருக்கு உத்தரமொன்றுஞ் சொல்லாமல், அவரே அறிந்து

போகும்படி ஒருநாள் தமது மனைவியாகிய வாசுகியம்மாள் கிணற்றில ஜலம் இறைத்துக்கொண் டிருக்கையில் அழைக்க, அந்தம்மாள் பாதிக் கிணற்றளவில் இறைத்தக் குடத்தை கயிற்றோடு அப்படியே நிற்கவிட்டு வந்தனர்; குடமும் நிறுத்திய அளவிலேயே அந்தரத்தில் நின்று விட்டது. மற்றொருநாள் நாயனாருக்குப் பழைய சாதம் பரிமாறி நிற்கையில், நாயனார் "இச்சாதம் சுடுகின்றது" என, அந்தம்மாள் உடனே விசிறியெடுத்துக் கொண்டுவந்து வீசியதையும், மற்றொருநாள் நல்ல நடுப்பகலில் சிறிதும் இருள் அணுகாவிடத்தில் தம கையிலிருந்த குழல் தவறி வீழ்ந்ததை யெடுக்க மனையாளை நோக்கித் "தீபங் கொண்டுவா!" என உடனே அங்ஙனம் கொண்டுவந்ததையும வந்திருந்தவர் கண்டு, "இப்படிப்பட்ட மனையாள் வாய்க்கில் இல்லறமே பெரிது" என்றும், "இல்லையேல் துறவறமே பெரிது" என்றும் தீர்மானித்துக்கொண்டு, ஒன்றுங் கேளாமற் போய்விட்டார்.

இவ்வாறு நாயனாரும், அவரது மனைவியாரும் இல்லற நடாத்தி வருங்காலத்தில், வாசுகியம்மாள் விதேகமடையுந் தறுவாயில் நாயனார் திருமுகத்தைப் பார்க்க, நாயனாரும் "என்ன பார்க்கின்றாய்?" என்று கேட்டனர். அதன் பின்னர் வாசுகியம்மையார், "தாங்கள் என்னை மணஞ்செய்தவன்று தேவரீருக்கு யான் அன்னம் பரிமாறும்போது, "ஒரு நத்தைக் கூட்டில் ஜலமும் ஊசியும் வை." எனக் கட்டளையிட்டதின் காரணம் என்னவென அறிதற்கில்லை" அது எதற்கென்று தெரிந்துக்கொள்ள அடியாளுக்கு அவா என்று விண்ணப்பஞ் செய்தாள். அதற்கு நாயனார், "பேதாய்! அன்னம் பாத்திரத்தினின்று புறத்தில் சிதறில் அதனை எடுத்துப் பரிசுத்தஞ் செய்வதற்காக அதனை வைக்கச்சொன்னது"

என்றவுடனே அதனைக் கேட்டு விதேகம் அடைந்தனள். அப்போது நாயனார்,

“அடிசிற் கினியாளே ! அன்புடை யாளே !
படிசொற் றவறாத பாவாய் ! அடிவருடிப்
பின்தூங்கி முன்எழூஉம் பேதையே போதியோ
என்றூங்கும் என்கண் இரா.”

என்று அம்மையாரின் நற்குணங்களைப் புகழ்ந்து, பிரிவால் வருந்தி, அந்தத் திருமேனியைச் சமாதிபண்ணினார்.

குணபூஷணீ ! வாசுகி யம்மாளின் இல்லற தருமத்தைக் கேட்டாயா ! இவ்வித மிருந்தாலன்றோ வீட்டுத் தருமஞ் சிறக்கும். சீதேவி நிலைப்பாள். துஷ்டைகளால் அன்றோ அவர் வீட்டில் மூதேவி யடைவது. நற்பெண்டிர்களின் பொதுக்குணமோ,

“அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னினழகும் புவிப்பொறையும்—வன்னவுடல்
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்.”

அதாவது, தாயானவள் தன் குழந்தைக்கு எப்படி நற்சுவை யுண்டி யளித்து அன்பாய் ஆதரிக்கிறாளோ அதுபோலவும், வேலைக்காரி தன் எஜமானவார் எவ்வகையினரே யாயினும் அவர்களின் உயர்வு தாழ்வை நோக்காமல் அவர்களுக்குத் தன்மீது தயையுண்டாக வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்கள் கட்டளையை மீறாமல் அவர்களுக்குக் கீழ்ப்படிதலுள்ளவளாய் அடிமைத் தொழில் செய்கின்றாளோ அதுபோலவும்; பொன்னை எப்படிக் காய்ச்சினும், உருட்டினும், உடைக்கினும், நகையாய்த் தலைக்கிடினும், காலுக்கிடினும், மற்றென் செய்யினும் தன்னிறத்தில் மாறுபடாது

ஒளிர்கின்றது போலவும்; பூமி எவ்வளவோ பாரத்தையுந் தாங்கிப் பொறுமையாய்ச் சுமந்திருத்தல் போலவும்; விலைமாதர்கள் தம்மை விரும்பிய நாயகர்க்கு வெறுப்புண்டாகா வண்ணம் நாண மென்பதை முற்றும் மறந்து இன்பந் தருகின்றார்களோ அதுபோலவும்; பெருமை பொருந்திய மந்திரித்தொழில் புரிபவன் தமது அரசு நிலைத்து ஓங்கும்படி மன்னனுக்குச் சமயோசிதமாய் ஆன்ற சூழ்ச்சிகளை எடுத்துக் காட்டி உதவுகின்றானோ அதுபோலவும், இல்வாழ்க்கையில் தலைவியாய் உள்ள ஒருவள் தனது கணவனிடம் தாய்போன்றும், அடிமையைப் போன்றும், வேசிபோன்றும், மந்திரி போன்றும் விளங்கி அவனைப் பேணல்வேண்டும்.

பின்னும் பொன் எப்படி உயர்ந்த பொருளாய், யாவராலும் அணிக்கும் மணிக்கும் பிணிக்கும் வேண்டப்படுகின்றதோ அதுபோன்று, பலரும் நன்கு மதிக்கும்படியான நல்லொழுக்கத்தை அனுசரித்தல் வேண்டும்” என்றார்.

பின்னும் இல்வாழ்க்கையில் சங்கடம் பல நிகழ்தல் இயல்பா யுள்ளதே யென்பதையும், அவற்றைப் பொறுத்தலே நிரை யென்பதையும் நன்கெடுத்துக் கூறுவான் “பூமியைப்போல மனையாட்குப் பொறுமை இருத்தல் வேண்டும்” என்றும் கூறினர் அறிஞர். ஆதலால், குணபூஷணீ ! மனையாட்கள் மஞ்சனையும் மங்கல நாணையும் பிரியாமை, சுத்தமா யிருத்தல், இன்சொற்கூறல், முகமலர்ந்திருத்தல், ஈகை, கருணை, விருந்தோம்பல், பெரியோரைப் பேணல் முதலிய நற்குணங்களை உடையவர்களாகவும், அந்நற்குணங்களே தங்களுக்குச் சிறந்த ஆபரணங்கள் என்ற உயர்மதிப்புக் கொண்டவர்களாகவும்; வீண் செலவு, வீண் ஆடம்பரங்களில் ஆசை, தன் வருவாய்க்கு மேற்படச் செலவிடுதல் முத

லிய துர்க்குணங்கள் அகன்றவர்களாயு மிருத்தல்வேண்டும். தீய கருமங்களே கணவர்களை வறுமையில் தள்ளுவது; அந்த வறுமையே அவனது முன்னேற்றங்களை யெல்லாங் கெடுத்துத் துன்பத்தில் விடுப்பது; அந்தத் துன்பமே இல்லறத்திற்குக் கேட்டை விளைப்பது; இத்தியாதி கெடுதிக்குக் காரணம் மனையாட்டியின் வீண்செலவே யாதலின், கணவன் துக்கத்திலாழவும், பிள்ளைகள் கல்வியில்லாதவராகவும் தாய் தந்தையின் பிற்காலத்தில் அவர்கள் தரித்திரத்தில் பரிதபிப்பாராகவும் வருந்த நேரிடுகின்றது. ஆகையால், மனையாட்டியே எல்லாப் பாவ புண்ணியங்களைச் சுமப்பவளா யிருக்கின்றாள். அவள், கற்புக்கு வழிகாட்டியாகிய வாசுகியைப்போல் தனது கணவனது ஏவலையே யெதிர்பார்த்துத் தானென ஒன்றுந் துணிந்து செய்யாமல் இருப்பாளாயினன்றோ பாப புண்ணியம் புருஷனுடையதாகும்.

ஆகையால், குணபூஷணீ! உத்தமியாக நல்லொழுக்கங்களில் ஒழுகு! உத்தம பதிவிரதைகளைத் தேவர்களுந் தொழுவார்கள், மூர்த்திகளாகிய மூவர்களும தொழுவார்கள் அவர்கள் தமது கற்பி ன வன்மையால் அதிசயிக்கத் தக்க பல காரியங்களைச் செய்பவராவார். குணபூஷணீ! மண்டோதரி தனது தபோமகிமையால் ஈசுவரனையும் ஒரு குழந்தை ரூபமாக்கித் தனது கையிலேந்தினாள். தமயந்தி தனது கற்பின் வன்மையினால் தன்னைத் தீண்டவந்த வேடனைச் சுட்டெரித்தாள். வாசுகி தனது கற்பின் வன்மையால் மணலை அமுதாக்கினாள்; பின்னும் ஞானதிருஷ்டி வாய்க்கப் பெற்றவளாய்க் கொங்கணரை வியக்கவைத்தாள். கண்ணகி தனது கற்பின் வன்மையால் மதுராபுரியை எரித்தாள். இவ்வாறாக அருந்ததி, திரௌபதி முதலிய அநேக கற்புக்கரசிகள் அதியற்புதமான காரியங்களைச் செய்திருக்கின்றனர். ஆகையினாலேதான்,

"கற்பு மேய கனக்குழை மாதரைப்
பெற்ற ளோர்தம் மரபும் பெருந்தவக்
கற்பி னாட்கொண்ட காதல னருயிர்ச்
சுற்றம் யாவும் துறக்கத்தி னெய்துமால்."

"காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுறு கற்பினர்த மெய்யுரையி னிற்கும்
ஈண்டைவுள தெய்வதமு மாமுகிலு மென்றால்
ஆண்டகைமை யோர்களு மவர்க்குநிக ரன்றே."

—காசிகாண்டம்

எனப்பெரியோர் புகழ்ந்துரைத்தனர். யான் கூறிய இப்போதங்களின் தாத்பரியங்களை யுணர்ந்தாயோ? குணபூஷணீ! "கற்புடைய பெண்பிறப்பு, ஆண்பிறப்பினும் மிக்கது. கற்புடைய பெண்டிரால் அவர்களைப் பெற்ற தாய்தந்தையாதியர்களும் அங்ஙனே அம் மங்கையரின் ஆருயிர்க்காதலனுடன் அவன் தாய்தந்தையாதிச் சுற்றங்களும் நற்கதியுடைவர் என்றவாறாகும்."

என்றிவ்வாறு பற்பல நற்போதனைகளை மார்க்க சகாய தேசிகர் கூற, குணபூஷணி ஒவ்வொன்றையும் தன்மனத்துள் பசுமரத்து ஆணிபோல பதித்துக் கொண்டாள். தேசிகர் சொல்வதை எல்லாம் சிரத்தையோடு சிறிதும் பேசாமல் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவர் கூறிமுடித்தபின அவரைவணங்கிச் சிறிபாட்டுத் தங்க ளாசியால் எல்லா நற்குணங்களும் அமைந்திருக்கும் என்று நம்புகின்றேன் என்று விநயமாகக் கூறிப் பின்னும் வணங்கினாள், தேசிகரும் மகிழ்ந்து பின்னும் ஆசீர்வதித்து முதலியாரிடம் சிறிதுநேரம் பேசிவிட்டுப் பின்னரே தான் குணபூஷணியின் விவாக நிச்சயார்த்த நாளைக்கு வருவதாக விடைபெற் றகன்றார்.

எட்டாவது அத்தியாயம்.

சம்பந்த முதலியார் மகா புத்திசாலியானதினால் நிச்சயார்த்த காலம் மறுதினமே நிச்சயித்து, அந்நாளிலும் மருகனாவானின் குணாதிசயங்களை மேன்மேலும் விசாரித்து, நன்றெனத் திடப்பட்டு நிச்சயார்த்தம் செவ்வனே செய்விக்க எதிர்கொண்டிருந்தார். அங்ஙனமே வைகாசிமீ 20-ந்தேதி சுக்கிரவாரம் கூடிய இச்சுப தினத்தில் இரவு 8-மணிக்குப் பந்துமித்திரர் சூழ, குணபூஷணிக்கும், இராஜசேகரனுக்கும் விவாகநிச்சயார்த்தமும் நிறைவேறிற்று; தேசிகரும் விஜயமாயிருந்தார். அடுத்த ஆவணிமாதம் 17-ந்தேதி சோமவாரம் உதயாதி 4-30 மணிக்கு ரிஷப லக்கினத்தில் திருக்கல்யாணம் நிச்சயித்துப் பத்திரிகையும் எழுதப்பெற்றது. வந்திருந்தவர்களுக்குச் சந்தனம், புஷ்பம் தாம்பூலம் சமர்ப்பித்து அறுசுவை உண்டி அளித்தனர். பந்துமித்திரர் யாவரும் கண்டு உண்டு களித்து அவரவர் இல்லத்திற்குச் சென்றனர்.

குணபூஷணிக்கு விவாக நிச்சயார்த்தமாகப் பிள்ளை வீட்டார் அளித்த பொருள்கள் வந்தவுடன், குணபூஷணி கலியாணமுடியப்பெற்றாளாகவே மதித்துக்கொண்டு "கணவனைக் காண்பதென்று?" என நாளை எதிர்பார்த்திருந்தாள். தேசிகர் குணபூஷணத்தை நோக்கினார். குணபூஷணம் அவரை நமஸ்கரிக்க, தேசிகர், "அம்மணி! குணபூஷணம்! உன் தந்தை உனக்குச் செய்யவேண்டிய கடமைகளை யெல்லாம் செய்துமுடித்துவிட்டார். ஆனால், இன்னும் ஒன்றுதான் இருக்கிறது. அதாவது, உன் திருக்கல்யாணமே. அதன் பின்னர் உனக்குக் கணவனே தந்தை தாய் எல்லாமவன்" என்றார்.

குணபூஷணம்,—"சுவாமிகளே! தாங்கள் என் கணவன் வீட்டிற்கு வாரீரோ!"

தேசிகர்:—"அம்மே! அவர் எமக்கு முகப்பழக்கமானவரல்லவே; ஆயினும், உமது தந்தை சகிதமாக ஆங்கு வரக்கூடும்"

குணபூஷணம்:—"சுவாமி! தாங்கள் எனது தந்தை நன்மையைமட்டும் கருதுகின்றீர்கள் போலும். சிறியேன் நன்மையைக் கருதவேண்டாமா?

தேசிகர்:—"குழந்தாய்! அப்படி நினையாதே! யான் சமதிருஷ்டி யுடையவன் உலக விவகாரம் உனக்குத் தெரியாது. எனக்கு யாவரும ஒன்றே. இருக்கட்டும், சென்றவாரம் யான் அதிகநேரமாகப் பற்பலசத்விஷயங்களை உனக்குக் கற்பித்துவருகின்றபோது நீ மௌனமாகவே கேட்டுக்கொண்டிருந்ததைப்பற்றி யான் ஒருவாறாக உன்னை யெண்ணியிருந்தேன். இப்போதல்லவோ உனது மனக்கிடை தெரியலாயிற்று. "பதிவ்ரதா" என்ற சொல்லுக்குப் "புருஷனைத் தேடுகிறவள்" என்று ஆரியர் ஓதிய பொருளை முன்னே சொல்லியிருக்கிறேன் ஆகையால், குணபூஷணி! இனி உன்னைப் பதிவிரதாபூஷணி! என்றே அழைக்கலாம்.

பதிவிரதா பூஷணியே! இத்தகைய அன்பு, அடக்கம் முதலிய நற்குணங்களை யெல்லாம அமையப்பெற்ற ஒருத்தியே மனையாட்டியாக வேண்டுமென்று கொள்ளும் புருடனும், அவனுடைய பந்துக்களும் வேண்டிய பிரயாசையெல்லாம் எடுத்துக் கடைசியாக ஒருத்தியை நல்லாளென்று நம்பியே நிச்சயார்த்தம் செய்து விவாகம் முடிக்கின்றனர். அவர்கள் நினைவாகிய மனதிற்கும், விசாரணையான புத்திக்கும்

பழியுண்டாகாவண்ணம் ஒழுங்காக நடப்பவளே உத்தமி யாவாள்.

பசுத்தோலைப் போர்த்திருந்த புலியைப்போலும் சில மங்கையர் மணமுடிந்த பிறகு தன் பொல்லாக்குணத்தின் சுயரூபத்தைக் காட்டிப் பெரியோர் நம்பிக்கையில் மண்ணைப் போடுகின்றார்கள். கணவன் அம்மங்கையின் நடவடிக்கையை நாடிக் கண்டிப்பானாயின் அவனைத் தன் வசமாக்க வகைதேடுகிறார்கள். அப்போது "குலத்தளவே யாகுங் குணம்" என்றபடி, அத்தீய மங்கையருக்கு நிகரான தீயோர்கள் அம்மங்கையருக்கு நேசமாகி, "இடுமருந்து என ஒன்றிருக்கிறது; அதனை உன் கணவனுக்கு இடுவாயாகில் நீ சொன்னபடி யாடுவான்" என்று சொல்லவே, அதன் நிமித்தமாக அதிக பொருளை விரைய மிடுகின்றார்கள். "கிணறு வெட்டப்போய் பூதம் புறப்பட்டது" போல், கணவன் தன் வசமாவான் என்று அவள் மருந்தூட்ட, அதனால் அவன் வயிற்றுள் கட்டி ஏற்பட்டும், காச முதலிய பிணிகள் ஏற்பட்டும் நமன் வசமாகின்றான். தோஷிகள் பின்னால் வருந்துகின்றார்கள்.

"பதிவிரதா பூஷணி! இம் மருந்தைப்பற்றிய ஒரு சிறியகதை சொல்லுகிறேன் கேள்! சென்னைக்கடுத்த ஓர் ஊரிலே விஜயம் என்னும் மங்கை ஒருத்தி தனது கணவனுக்குத் தானே புருஷனைப்போல் இருந்தாள். புருஷனுக்கோ மாதம் 20 - ரூபாய் சம்பளம். மனையாட்டியோ அக்கம் பக்கத்தில் கடன் வாங்கி நாளொன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் செலவிட்டொழிப்பாள். பின்னும் எப்போதும் "நல்லுணவு இல்லை; நல்லுடை யில்லை; நல்ல நகையில்லை; என்னைப் போலொத்த மங்கையரெல்லாம் எவ்வளவு இஷ்டப்படிச் செலவிடுகிறார்கள்; அவர்களின் கணவர் பயாஸ்கோப், ராஜாம்

பாள் டம்பாச்சாரி முதலிய ஆட்டங்களுக்கெல்லாம் அழைத்துச் செல்லுகிறார்கள்; என் விதி யிப்படி யிருக்கிறதே" என்று எப்போதும் குறையேகூறி கணவனை வருத்திக்கொண்டிருப்பாள். கணவனுக்கு மன ஆறுதலே கிடையாது. நாள்தோறும் இவ்விருவருக்கும் கலகமே. ஆதலால், மனையாட்டி அவனுக்கு மருந்துபோட ஒரு மாந்திரீகனை வினவினாள். இவளது கருத்தை அறிந்து, அவர் அப்படியே யாகட்டும். நாளை எலுமிச்சம்பழம், வாழைப்பழம், தேங்காய், கற்பூரம், வெற்றிலை, பாக்கு, ஊதுவத்தியோடு தட்சணை ரூபாய் ஐந்து கொண்டுவந்து கொடு! யான் மருந்து தயாரித்து வைக்கிறேன்; பெற்றுக்கொள்ளலாம்" என்றான். அப்படியே அடுத்தநாள் கொண்டுபோய்ச் செலுத்தினாள். மாந்திரீகன், இரகஸ்யமாக ஒரு சீசாவில் குளிர்ந்த ஜலத்தை வார்த்து வைத்திருந்து அப்பேதைப் பெண்ணைப் பார்த்து, "அம்மா! இந்தச்சீசாவில் இருக்கும் அவிழ்தம் மிகுதியும் கஷ்ட சாத்தியமாய்ச் செய்து முடிக்கப்பட்டது. நீயோ மிகவும் நல்லவள்; நான் சொல்லுகிறபடியே நடக்கிறவளா யிருக்கின்றாய்; மிகவும் அருமையான மோகன பஸ்பம் ஒன்று என்னிடம் இருக்கிறது. அதை இந்தத் திராவகத்தோடு கலந்து உன் கணவனுக்குத் தருவாயாகில் அதனைச் சாப்பிட்ட அக்கணமே உன் கணவன் உன் வசமாவான்; உன் அருமைக் குணத்தை நாடி உனக்கு அதனை இரண்டு ரூபாய்க்குக் கொடுக்கலாம் என நினைக்கிறேன்" என்று சொல்ல, அவள் அப்படியே இரண்டு ரூபாய் தந்தாள். மாந்திரீகன், "சொற்ப கிரயமே என்று நினை" என்று சொல்லி, விபூதியை ஒரு சிட்டிகைப் பிரமாணம் கையில் பற்றிக்கொண்டு கணேச மூர்த்தியைத் தியானித்து, "ஓம் கணாதிபதியே நம" என்று அந்தத் தண்ணீரில் போட்டு, மஞ்சள் துணிக் கவசமிட்டுக், கணபதியின்

திருமுன் கற்பூர தீபமிட்டு, அந்த ஸ்திரீயை வணங்கும்படி ஆஞ்ஞாபித்துப், பிறகு ஒரு செப்புத்தகட்டில் அந்தக் கற்பூரப் புகையைப் பிடித்துக்கொண்டு, அந்தத்தகட்டில் தனக்கு என்னவோ தெரிகின்றது போலப் பாவனை காட்டி, “அம்மா! நீ நடக்கவேண்டிய விதத்தைக் கணேசர் இதோ இந்த அஞ்சனத்தில் நின்று சொல்லுகிறார். இதை நீ வெகு கவனமாகக் கேட்டு அதன்படி நடக்கவேண்டும்; அன்றேல் விக்னேஸ்வரர் தன் பூதப்படையை யனுப்பி உதிரஞ்சாய வருத்தி அதற்கு உன்னை இரையாக்குவார். இதனை மட்டும் உறுதியாய் நம்பு! அதாவது, இச்சீசாவில் இருக்கும் மருந்தை உன் எஜமான் உத்தியோகத்திலிருந்து வருந்தறுவாயில் ஒரு வாய் மருந்து உன் வாயில் வார்த்துக்கொண்டு உன் புருஷன் சாப்பிடும் வரைக்கும் அதனை உட்கொள்ளவும் கூடாது, உமிழவும் கூடாது; புருஷன் நித்திரைக்குப்போகும் சமயத்தில் உமிழ்ந்துவிட்டு, கைகால் சுத்தி செய்து கொண்டு, கணேசமூர்த்தியைத் தியானித்துப் போஜனஞ்செய்து நித்திரை செய்யவேண்டும். இச்சீசாவில் இருக்கும் மருந்தை 20 - நாளைக்குச் சாப்பிடவேண்டும். மருந்தின் விசேடத்தால் உன் கணவன் மருந்துண்ட இரண்டு நாட்களுக்குப் பழையபடியேதான் இருப்பான்; அடுத்த ஐந்தாநாளிலிருந்து அவன் குணத்தைக் காண்பாய். இடையில் உன் கணவன் உன்மீது என்றுமில்லாத அன்பு பாராட்டுவான்; அறிந்து கொள்வாயாக.” என்று சொல்லி, செப்பேட்டிலிருந்து புகை மையையெடுத்து அவள் நெற்றியில் பூசிச் சிரசில் ஊதி யனுப்பிவிட்டான்.

இவ்விதம் மாந்திரீகன் செப்பேட்டிலிருந்த புகை மையிட்டு சிரசில் ஊதி அனுப்பிவிடவும், விஜயம் தனது வீட்டுக்கு வந்து மாந்திரீகன் வார்த்தைப்படி நடந்துவர, இரு

வருக்கும் நித்திய சமாதான முண்டாக இல்வாழ்க்கை சிறப்பாயிற்று.

அப்படிக் கடுத்தமொழி பேசாமல் கணவனுக்கு அடங்கியிருந்தால் சச்சரவு ஏன் வரும்? ஒருக்காலும் வாரதே. பதிவிரதா சிரோமணி பெரியோர்களின் தந்திரத்தை யறியாத பேதைகள் மருந்து மருந்தென்று ஒன்றைத்தேடிப் புருஷனுக்கு வயிற்றுள் கட்டியும் காசமும் உண்டாக்கி அவன் மரித்து அறவே நீங்கக் காரணமாகின்றார்கள். நல்லொழுக்கமுள்ளவளுக்குப் புருஷ வசிய மருந்து என்னத்திற்கு? நல்லொழுக்கமே சிறந்த வசிய மருந்தாதலன்றிப் பிறிதொரு மருந்திருப்பதாக யான் கண்டிலேன்.

பதிவிரதா சிரோமணி! பெண்களுள்ளும் இவ்வகையானவர்களும் பலர் இருக்கிறார்கள். ஆதலால், பெண் கொள்ளுகின்றவர், ஒருத்தியை நல்லாளென்றே திடங்கொண்டு கல்யாணஞ் செய்த பிறகு அதற்கு மாறாக இருக்கக் கண்டு கவலைக்கும் துன்பத்திற்கும் ஆளாகின்றார்கள்.

கல்யாணச் சடங்கில் பல நீதிகள் கற்பிப்பன உண்டு. அவைகளைக் கூறுகின்றேன் கேள் என்று கூறுவாராயினர்.

ஒன்பதாவது அத்தியாயம்.

விவாகவிதி.

விவாகம் :—பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம் தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என எட்டு வகைப்படும்.

இவற்றுள், முக்கியமாய் இப்போது நடந்துவருகிற விவாகம் பிரசாபத்தியம். அதாவது, மணமகனுக்கு உரியவர்களும் மணமகளுக்கு உரியவர்களும் கலந்து பேசி, குலம் கோத்திரம் கொள்வினை கொடுப்பினை முதலியன விசாரித்து, பொருத்த நிமித்தம் பார்த்துப் பெண்ணை நல்ல சுபமுகூர்த்தத்தில் இஷ்ட பந்துஜன சகிதமாக விநாயகர் அஷ்டதிக்குப்பாலகர் முதலிய தேவர்கள் முன் தத்தஞ்செய்து கொடுப்பர்.

அஷ்டதிக்குப்பாலகர் :—நான்கு வேதங்களுக்குப் பிரதியாக நான்கு கால்கள் அமைக்கப்பட்ட விவாக மண்டபத்தில், பக்கத்துக்கு 24 - சிற்பி அங்குலமாக 96 - தத்துவமும், 96 - அங்குலமாகவுள்ள மணவறைப்பந்தலின் தத்துவச் சதுக்கத்திற்குக் கிழக்கில், ஆயிரங்கண்ணுள்ள தேவேந்திரனுக்குப் பிரதியாக அனேக முகமுள்ள கிளை விளக்கையும், தென் கீழ்த்திசையில் அக்கினி தேவனுக்குப் பிரதியாகக் குடவிளக்கையும், தென்திசையில் இயம தருமராஜனுக்குப் பிரதியாகத் தர்ம கர்ம பாவ புண்ணியப் பகுப்புக்குரிய புரோகிதரையும், தென் மேற்றிசையில் நிருதிதேவனுக்குப் பிரதியாகத் தோழிப் பெண்ணையும், மேற்குத்திசையில் வருண

தேவனுக்குப் பிரதியாக மணமகனையும், வடமேற்கில் வாயு தேவனுக்குப் பிரதியாக விசிறிகொண்டு வீசும் மாப்பிள்ளைத் தோழனையும், வடதிசையில் குபேரனுக்குப் பிரதியாகப் பணப்பையைக் கையிற்றாங்கி பூரிகொடுக்கும் விவாக கர்த்தாவையும், வடகிழக்கு மூலையில் ஈசான மூர்த்திக்குப் பிரதியாக அம்மியையும், குழவியையும் ஆக அஷ்டதிக்குப் பாலகரையும், அவ்வவர்க்குரிய மந்திரத்தால் ஆவாகனஞ்செய்து, சந்தனாட்சதை புஷ்பஞ்சாத்தி, எடுத்தகாரியம் குறைவின்றி நிறைவேறும்படிச் சங்கல்பஞ் செய்து கொள்ளுகின்றனர்.

நவக்கிரகங்கள் :—அஷ்டதிக்குப்பாலகரில் ஈசான மூர்த்தியாக அமைக்கப்பட்ட அம்மி குழவிகளுக்குத் தென்பாரிசத்தில் நெல்லைப் பரப்பி ஒன்பது வீடாகக் கீறி, நவக்கிரகங்களுக்குப் பிரதியாக முளைகட்டியிருக்கும் நவதானியங்களைப் பாலிகையிலிட்டு, அந்தந்த ஸ்தானத்தில் அமைத்து, அவரவர்க்குரிய மந்திரத்தினால் ஆவாகனஞ்செய்து, தருப்பையினாலாவது முப்புரி நூலினாலாவது பட்டு முதலிய வஸ்திரத்தினாலாவது பந்தித்துத், தூபதீப நைவேத்தியங் காட்டிச் சிந்தித்துச் சங்கல்பம் பண்ணிக்கொள்ளுகின்றனர்.

சப்த ரிஷிகள் :—நவக்கிரக பாலிகைகளுக்கும் அக்கினி தேவனுக்கும் பிரதியாக அமைக்கப்பட்ட குடவிளக்கும் நடுவில் சப்த ரிஷிகளுக்குப் பிரதியாக ஏழு கரகங்களுக்கு நூல் சுற்றி அவைகளில் ஜலம் பூரித்து வைத்து அவ்வவர் மந்திரத்தால் ஆவாகனஞ் செய்து, கந்த, புஷ்ப, அக்ஷதைகள் சாத்தி, தூப தீப நைவேத்தியங் கொடுத்துச் சங்கல்பம் பண்ணிக் கொள்ளுகின்றனர்.

சப்த தீர்த்தம் :—தேவேந்திரனுக்குப் பிரதியாக அமைக்கப்பட்ட கிளைவிளக்குக்குமுன் மணலைப்பரப்பி அதில்

ஒரு குடத்தை வைத்து, அதில் கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதா, காவிரி, கன்னியாகுமரி, கோதாவிரி ஆகிய சப்த தீர்த்தங்களுக்குப் பிரதியாக, தேவாலயம் நந்தவனம் நதி முதலிய தீர்த்தங்களில் ஏதாவது அந்தந்த தீர்த்தங்களுக்குள்ள மந்திரங்களைச் சொல்லி அக்குடத்தில் விடுத்து ஆவாகனஞ் செய்து, விபூதி சந்தனாட்சதை குங்குமம் தரித்து, தூப தீப நைவேத்தியங் காட்டி, ஒரு கரகத்தை அதன்மேல் மூடிவைத்துச் சங்கல்பம் பண்ணிக் கொள்ளுகின்றனர்.

திரிமூர்த்தி சொரூபம் :—பிரம்ம சொரூபமாகிய அரசின் கிளைக்குத் தேன் முதலியவற்றால் நீராட்டிவைத்துச் சந்தன புஷ்பாக்ஷதை சாத்தி, வெண்பட்டு அல்லது வெண்ணூல் தரிக்கவும் ஏற்படுத்தியுள்ளார்.

விஷ்ணு சொரூபமாகிய ஆலிற்குச் சுத்தோதகம், கஸ்தூரி, பனிநீர், வெட்டிவேர், வாசங்களினாலும் திருமஞ்சனமாட்டி, நீலம் அல்லது மஞ்சள் வஸ்திரமாவது நூலாவது தரித்துத் துளசி துளசிமணி சாத்தவுஞ் செய்கின்றனர்.

உருத்திர சொரூபமாகிய கலியாண முருக்குக்குச் சந்தனாதி யபிஷேகம் செய்து, திருநீ றணிந்து, கந்தபுஷ்பாக்ஷதைகள் சாத்தி, ருத்திராக்ஷம், வில்வம், புஷ்பமாலை யணியவும் புரிகின்றனர்.

இவ்வாறு பிரமன் விஷ்ணு உருத்திரன் ஆகிய மூவரையும் முறையே அரசு, ஆல், கலியாணமுருக்கு ஆகிய மூன்றினும் அவ்வவர் மந்திரத்தால் ஆவாகனஞ் செய்து, கிளைவிளக்குக்கும், சப்ததீர்த்தம் விட்டிருக்கும் குடத்திற்கும் நடுவில் 12 அங்குலம் பள்ளந் தோண்டி அதில் நீர், பால், தேன் விட்டு ; நவரத்தினம், பொன், வெள்ளி, தாம்பிரம், நவதானியம் ஆகிய இவற்றுள் ஏதாவதுபோட்டு, மூன்று முதிர்ந்த

வயதுள்ள சுமங்கிலிகளைச்சரஸ்வதி, இலட்சுமி, பார்வதியாகப் பாவித்து, அவர்களுக்குச் சந்தனம் புஷ்பம் அக்ஷதை கொடுத்து, அவர்களால் மும்மூர்த்திசொரூபமாகி அரசாணிக்காலை அப் பள்ளத்தில் விடுத்துப் ; பூவாரம், பொன்னாரம், முத்தாரம் பூட்டித் ; தூபதீப நைவேத்தியங் கொடுத்து ; அப்பள்ளத்தை நெல்லினால் மூடி ; நீர், பால், தேன் விட்டுப்பணிந்து, சங்கற்பம் பண்ணிக்கொள்ளுகின்றனர்.

ஓமம்:—மங்கிலிய ஸ்திரீகளால் கொண்டுவரப்பட்ட அக்கினியை அரணி மதித்த அக்கினியாகப் பாவித்து, அக்கினிதேவனுடைய மந்திரத்தினால் அதை விருத்திசெய்து, சகல உபசாரத்துடன் பூசித்து அர்க்கியங் கொடுத்துத் தொழுது சங்கற்பித்துக் கொள்ளுகின்றனர்.

கங்கணம் :—தொடங்கிய காரியம் முடிவாகிற வரையில் பயபக்தியாகவிருந்து நடத்துவதற்காகக் கணுவில்லாத முனை மஞ்சளுக்குக் கன்னிகை யிழைத்த நூலால் நவக்கிரக மந்திரஞ் சொல்லி, ஒன்பது முடி போடப்பட்ட கங்கணத்தை மணமகனும் மணமகளும் கட்டிக்கொள்ள ஏற்பாடுசெய்கின்றனர்.

மாங்கல்யம் :—ஆன்ம தத்துவம் இருபத்தினாலென்ன, 24 இழையாகக் கன்னிய ரிழைத்த நூலை முறுக்கில்லாமல் திருவடிக் குறிப்பாகிய மாங்கலியத்திலேற்றி, அதைத் தேங்காயிற் சுற்றி, முத்து இரத்தினம் அல்லது பச்சரிசி பரப்பிய தட்டில் வைத்து, மஞ்சள், குங்குமம், புஷ்பம், அக்ஷதைகளாற் பூசித்து, தூப தீப நைவேத்தியங் கொடுக்கின்றனர்.

வேத மந்திரோச்சாரணையோடு வேதியர், பெரியோர், நல்லோர், பந்துக்கள், மித்திரர்கள், முதலியோரால் ஆசீர்வதிக்கப்பட்ட அத் திருமாங்கல்யத்தை மணமகன் : சங்க

கள் ஓமெனும் பிரணவ நாதத்தை யொலிக்க, மணமகள் கழுத்திற் சேர்த்துப் பிடரியில் பிரம மந்திரத்தினாலே முதல் முடியும், விஷ்ணு மந்திரத்தினாலே இரண்டாவது முடியும், உருத்திர மந்திரத்தினாலே மூன்றாவது முடியும் ஆக மூன்று முடியும் போட்டு, அம் முடியை இடது கையிற் பற்றிக் கொண்டு இறைவனைத் துதித்து, வலது கரத்தில் விபூதியெடுத்து அம் முடியின்மேல் வைத்து, “ துற்சோபம், துற்பயங்கரம். துர்மரணம், துர்வியாதி நீங்கவும், சகல பாபரோக நிவாரணமாகவும, சம்பத்து சாது சங்கம் உண்டாகவும் ” என ஸ்ரீபஞ்சாட்சரத்தைச் செபித்துத் தன் நெற்றியில் விபூதி தரித்துக் கொண்டு, பெண்ணின் நெற்றியிலும் விபூதி தரித்துப், பெண்ணின் செவியில் ‘நூலோடு கூடிய இம்மாங்கல்யம் நம்முடைய சுகஜீவனத்துக்கு ஏதுவாகும்’ என்னும் பொருளமைந்த “ மாங்கல்யந் தந்து நாநேநா மமஜீவந்ஹேதுநா ” என்னும் மந்திரத்தை யுபதேசிக்கின்றனர்.

பின்பு நாயகியை நாயக னிடப்பாகத்தி லமர்த்தி முறையே மற்றைச் சடங்குகளை விதிப்படி நடத்தி ஓமாக்கினிக்குப் பூரணாகுதி கொடுத்து நீராஞ்சனமாகிய ஆலஞ் சுற்றுகின்றனர்.

அப்பால் இருவரும் அஷ்டமங்கலத்துடன் அரசாணிக்காலை மூன்றுதரம் பிரதட்சணஞ் செய்விக்கின்றனர்.

அஷ்ட மங்கலமாவது :—கைவிளக்கு, பூரண கும்பம், கண்ணாடி, அங்குசம், வெண்சாமரம், இணைக்கயல், கொடி, முரசு ஆகிய எட்டுமாம். அவற்றிற்குப் பிரதியாகக் கைவிளக்கு, சொம்பு, கண்ணாடி முதலியவற்றைப் பெதும்பைப் பருவமுடைய பெண்கள் எடுத்துக்கொண்டு முன்னதாகச் சுற்றி வரவேண்டுமே யல்லாமல் ஆவாகனஞ் செய்யப்பட்

டிருக்கிற நவக்கிரக பாலிகையைத் தொடப்படாது என்று ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

அவ்வாறு அரசாணி சுற்றிவரும்போது முதற் சுற்றில் அம்மி மிதித்தல், இரண்டாவது சுற்றில் அருந்ததி துதித்தல் மூன்றாவது சுற்றில் அனுபவ விதியை யறிதல் ஆக மூன்று சுற்றிலும் மூன்று காரியஞ் செய்யவேண்டும் என ஏற்படுத்தியிருக்கின்றனர்.

முதலாவது சுற்றில் மணமகன் ஈசான மூர்த்திக்குப் பிரதியாக வைக்கப்பட்டிருக்கிற அம்மியையும் குழவியையும் மணமகளுக்குக் காட்டிப், “ பெண்ணே ! இவ்விரண்டையும் சிவசத்தி சொரூபமாக மதிப்பாயாக ! இவ்விருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாத அர்த்தநாரீஸ்வர சொரூபமாயமைந்தது. இவர்களைப் போல நாமிருவரும் உடலும் உயிரும் போல் ஒரேமனதாய்ப் பிரியாத பிரியத்துடன் வாழ்ந்திருப்போமாக !” எனப் போதித்து, “ நீ இப்போது என் இடப்பாக மாயினை ” எனவும், இடப்பாகத்தில் தன் இடதுகைச் சிறுவிரலைப்பற்றி நிற்கும் மணமகளின் வலது காற் பெருவிரலைத் தன் இடதுகைப் பெருவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் பற்றி, “ நீ எப்போதும் எவ்விடத்தும் இப்பெருவிரல் திருஷ்டியாகவே நடக்க வேண்டும் ” எனவும் அறிவுறுத்த வேண்டுமேயன்றி, ஈசானமூர்த்தியாய் ஆவாகனஞ் செய்யப்பட்ட அம்மியையும் குழவியையும் மிதிக்கச்செய்கின்றனர்.

(ஆனால்கௌதமரின் பத்தினியாகிய அகலிகையென்பாள் தேவேந்திரனால் விரும்பப்பட்டு, அதனால் தனது கணவனது சாபமடைந்து, கல்லாய்ச் சமைந்தனள் என்பது சரித்திரம். அதற்குப் பிரதியாக திருமணப்பந்தலில் யாதோ ஒரு கல்லை யமைத்து “ மணமகளாவார் ஷை அகலியைப்போல் தீய கன்

மம் புரியலாகாது; அங்ஙனம் புரிபவரை வெறுக்கவேண்டியது" என்ற திருப்போதம் விளங்கற்கு அறிகுறியாகவும், "கற்பரசியாகிய அருந்ததியைப்போலாக வேண்டியது" என்ற நற்போதம் சிறப்பதற்குக் கருவியாகவுமே மணப்பந்தலின்கண் உள்ள கல்லை மிதித்தல் என்ற ஐதீகம், நமது அறிவு சான்ற முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாமேயன்றி சாக்ஷாத் பரசிவ சாட்சியாகவும், அஷ்டதிக்குப் பாலகருள் ஒன்றாகவும் விளங்கும் அம்மியையும் குழவியையும் வணங்குவதே விதியாகும் என்பது மேலோர் உடன்பாடாம்.)

இரண்டாவது சுற்றில் வடதிசையை நோக்கி அருந்ததியிருக்குமிடத்தைச் சுட்டிக்காட்டி, அவ்வருந்ததியும் அவர் பர்த்தாவாகிய வசிஷ்டரும் நடந்துகொண்ட இல்லறவொழுக்கத்தின் சரித்திரந் தெரியச் சொல்லிப், "பெண்ணே! நீயும் அவ்வருந்ததியைப்போல் இல்லறவொழுக்கந் தவறாது என்னுடன் இருந்து வாழ்வாயாயின், அவ்வித உன்னத பதம் அடையக்கூடும்" என அறிவுறுத்தித் தூப தீப நைவேத்தியங்களுடன் தொழுது வணங்கச் செய்கின்றனர்.

மூன்றாவது சுற்றில் மணவறையில் வந்து நின்று தென்திசையில் இயமதரும ராஜனுக்குப் பிரதியாக இருக்கப்பட்ட புரோகிதரைப் பூஜித்து வணங்க வேண்டும். அப்போது பிராமணோத்தமர்கள் அவ்விருவருக்கும் ஆசிகூறி, உலக வழக்க விதிகளையும், பாவ புண்ணியப் பகுப்பையும், தேவதா பூஜை-பிதுர்ப் பூஜை-தானதருமம் முதலியவற்றின் பயனையும் இதிகாச புராணங்களால் எடுத்துக் காட்டிக், கற்புடைய மகளிர் இலக்கணத்தையும் இல்லறவொழுக்கத்தையும் அதனாலடையத்தக்க அறம் பொருளின்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களின் பயனையும் விரிவாயெடுத்துரைத்து, அவர்கள் அவ்வண்ணம் நடந்து ஈடேறும்படி வாழ்த்தவேண்டும்.

மற்றைச் சடங்குகளும் தான தரும போஜனாதிகளும் முறையே நடந்து மூன்று வேளை ஓமம் பண்ணி கங்கண விசர்ஜனமானவுடன், முன் சொன்ன முறையே அந்தந்த தேவர்களை அவரோகண மந்திரங்களினால் அவரவர்கள் இருப்பிடஞ் சேர்த்துத், திரிமூர்த்த சொரூபமான அரசாணிக்காலை நந்தவனம் கோயில் தோட்டம் முதலிய சுத்த ஸ்தானங்களில் தனித்தனி அமைத்து, சாலியிலிருக்கின்ற சப்த தீர்த்த ஜலமும், சப்த ரிஷிகளின் கலச ஜலமும் விட்டுப் பாதுகாத்து வந்தால் அவைகள் தளிர்விட்டுத் துளிர்த்துத் தழைத்துச் செழிக்கும்.

நம்முடைய விவாகச் சடங்குகளில் செல்வர்களென்றும், ஏழையரென்றும் இல்லாமல் எல்லோருக்கும் விவாகப் பந்தல், மாங்கல்யம் கூறைவேஷ்டி முதலியவை ஒரே படித்தாயிருப்பதால் கிரமப்படி விதியை யனுசரித்து மணஞ்செய்யும் மணமகனும் மணமகளும் ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, முருக்கம் பூப்போல் சந்ததி விருத்தியாய், மூங்கில் போல் கிளைத்து, நோயற்றுத் தீர்க்காயுள்பெற்று வாழ்வார்கள்.

ஆகையால், பதிவிரதா! உன் கணவனும் நன்கு கற்றவன் எனக் கேள்வி. அவர் மூலமாய்ப் பிறவும் அறிந்துகொள்வாயாக.

பதிவிரதா! மணப் பந்தலின் அலங்காரத்தை நோக்குங்கால் "தம்பதிகட்குப் புத்திர சந்தான மிகவாக" என்று வாழ்த்துவான் போலும், பெரியோர்கள், குலைகுலையாய் அதி

கன் காய்க்கும் மரங்களாகிய தெங்கு, பனை, ஈந்து ஆகிய இவைகளை அலங்காரமாகக் கொண்டு அலங்கரிக்கின்றனர்.

“கோத்திரம் தொடர்ச்சியாய் வாழ்வதாக” எனவாழ்த்துதல் போலும், வாழைமரங்களைக் கட்டுகின்றனர்.

“தம்பதிகள் எக்காலத்தும் பிணியற்ற வாழ்வுடையரா யிருப்பாராக” என வாழ்த்துவான் போலும், பசிய அசோக இலை, மாவிலைகளைக் கட்டி யழகுறுத்துகின்றனர்.

இவ்வளவும் பெரியோர்கள் செய்ய நேர்ந்தது, தம்பதிகளின் ஈருடலும் ஒருயிருடையதாய் வாழ்தலைக் கருதியே யன்றோ? இத்தியாதி வாழ்த்து நிறைந்தது கல்யாண மாதலின் அதனைத் திருமணம் என்பர்.

பெரியோர்களின் கருத்திருந்தவண்ணம் திருக்கல்யாணம் நிறைவேறப்பெற்று இருபாலாரும் பழிச் சொல்லுக்கு இடமின்றி நல்லொழுக்க முடையராயின் அவர்களே பாக்கியவந்தராவர்.

ஆகையால், தம்பதி யிருபாலாரும் பகை, பழி, பாவம், அச்சத்திற்குக் காரணமாகின்ற விபசாரம் அற்றவர்களாகவும், முற்கூறிய சரித்திரங்களின்படி தேவதாபக்தி, ஜீவகாருண்ணியம், தான தருமம், அன்பு, அடக்கம் முதலிய நற்குணங்களை யுடையராகி, இம்மை மறுமைப் போகங்கட்கு அதிகாரிகளாகவும் வாழ்வார்களாக.”

இவ்விதம் மார்க்கசகாய தேசிகர் கூறி முடித்த வளவில், ஞானசம்பந்த முதலியார், மங்கையர் நாயகம், குணபூஷணி ஆகிய மூவரும் தேசிகரது திரு நோக்கிப் பணிந்து, நமஸ்கரித்து, “ஐயன்மீர்! எமது பாக்கியமே பாக்கியம்; தற்செயலாய் எமக்குப் பழகினீர். பெரியோர் கேண்மை யிருந்தவா

றென்னே! அரிய பெரிய விஷயங்களை யெல்லாம் கைம்மாறு கருதாமல் வள்ளலாய்? வழங்கினீர். உமது திருக்கருணை வாழ்க!” என்று அன்பாற்றி ஆசீர் பெற்றனர்.

பின்னர், சிலதினங் கழித்துப் பெரியோர்களால் நிச்சயித்த தினத்தன்று நல்லசுபமுகூர்த்தத்தில் இராஜசேகரனுக்கும், குணபூஷணிக்கும் விவாகம் நடந்தேறியது. அக்காலை, குணபூஷணம் தேசிகர் ஓதியபடி ஐதீகங்கள் நிறைவேறுந்தோறும் அவற்றின் பொருட்களை யுணர்ந்தவளா யிருந்து, ‘தான் மணங்கொள்ளச் செல்லுங்கால் குனிந்திருந்து அடக்க முடையவள்போல் காட்டி மாறும் குணமமைந்த சில மாதர்களின் இயல்பைப்போ லில்லாது” கற்பின் விசேடத்தால் சிறந்த சாவித்திரி, வாசுகியைப்போல் இல்வாழ்க்கையிலமர்ந்து, நற்குணத்தில் திருமகள்போலவும், கலைகளில் சரஸ்வதிபோலவும், சௌந்தரியத்தில் தமயந்திபோலவும், கல்யாணத்தில் உமையாள்போலவும், பதிவிரதா தருமத்தில் சீதாதேவிபோலவும், புத்திரப்பேற்றில் அதிதியைப் போலவும் வாழ்ந்து விளங்காநின்றாள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றுப்பெற்றது.

கணபதி வாசகசாலை, 92, குயவாட்சிகோயில் தெரு, காஞ்சீபுரம்.